சில் வாரா அருந்தமிழ் — 8

மேருமந்தர மாலை

சென்னைப் பல்கலைக் கழக வெளியீடு
1978

முதற் பதிப்பு : 1978

© சென்னைப் பல்கலைக் கழகம்,

விலை ரூ. 3.00

அச்சிட்டோர் :
அவ்வை அச்சுக்கூடம்,
சென்னை, 600 013.

அச்சில் வாரா அருந்தமிழ் — 8

மேருமந்தர மாலை

பதிப்பாசிரியர் :
மு. சண்முகம் பிள்ளை
தமிழ் விரிவுரையாளர்,
திருக்குறள் ஆராய்ச்சிப் பகுதி,
சென்னைப் பல்கலைக் கழகம்.

சென்னைப் பல்கலைக் கழகம்
1978

முதற்பதிப்பு : 1978.

இதுவரை வெளிவந்த அருந்தமிழ் நூல்கள் :

1. அப்பாண்டை நாதர் உலா
— தமிழாய்வு I, 1972.

2. நாககுமார காவியம்
— தமிழாய்வு II, 1973.

3. திருமேற்றிசை அந்தாதி
— அப்பாண்டை நாதர் உலாவின் தனி வெளியீட்டுப் பிற்சேர்க்கை, 1974.

4. ஈனமுத்துப் பாண்டியன் கதை
— தமிழாய்வு III, 1974.

5. அடிமதிக்குடி அய்யனூர் பிள்ளைத்தமிழ்
— தமிழாய்வு IV, 1975.

6. மெய்ம்மொழிச் சரிதை
— தமிழாய்வு VI, 1977.

7. சேலம் தாலந்தீர்த்த செழியன் மஞ்சரி
— தமிழாய்வு VII, 1978.

முகவுரை

அம்மானையின் தோற்றமும் வளர்ச்சியும்

அம்மானை என்பது மகளிர் விளையாட்டில் பிறந்து, காலப் போக்கில் சிற்சில மாறுதல்களைப் பெற்றுப் பின்னுளில் மகளிர்க்கான கதைப்பாடலாக உருவெடுத்துள்ளது. அம்மானைப் பாடல்கள் என்னும்போது, அம்மானை விளையாட்டிலே பெண்கள் பாடும் பாடல்கள் என்பதனோடு, மகளிர் பொழுதுபோக்காக வாசிக்கத்தக்க எளிய நடையில் அமைந்த கதைப்பாடல்களையும் குறிக்கும். எனினும், நாளடைவில் அம்மானைப் பாடல் என்பது கதைப்பாட லின் வேற்றுப்பெயராகவே நிலைத்துவிட்டது.

அம்மானை—சொற்பொருள் வழக்கு

முதற்கண் அம்மானைப் பாட்டின் பிறப்பினைச் சற்று நோக்கிப் பின்னுளில் வளர்ந்து பெருகிய அம்மானைக் கதைப்பாடல்களுக்கு வருவோம்.

'அம்மனை' என்பது தாய் என்னும் பொருள் தருவது. அம்மானை என்பது அம்மனை என்பதன் விளியாகக் கொள்ளல் தகும். இச்சொல் ஈறு திரிந்து 'அம்மானுய்', 'அம்மானே' எனவும் வரும். பெண்கள் கையால் காய்களை வீசியெறிந்து ஆடும் விளையாட்டையும், அதற்குப் பயன்படுத்திய காய்களையும், அவ்விளையாட்டில் அவர்கள் பாடிய பாடல்களையும் குறிக்க 'அம்மானை' என்பது பயன் படுத்தப்பட்டுள்ளமையை இலக்கிய வளர்ச்சியில் நாம் காண லாகும்.

அம்மானை ஆடிடம்

அம்மானை விளையாட்டை இளம்பெண்கள் தங்கள் இல்லங் களிலும் தெருவீதிகளிலும் விளையாடுவது வழக்கம்.

> 'அம்மனைதம் கையில்கொண்டு அங்கு அணியிழையார்
> தம்மனையில் பாடும் தகையேலோர் அம்மானை'
>
> (சிலப். வாழ்த்துக். 20)

எனவரும் சிலப்பதிகார அடிகள் பெண்கள் தம் வீடுகளில் அம்மானை விளையாடுதலைக் குறிப்பிடுகின்றன. ஒட்டக்கூத்தர் பாடிய விக்கிரம சோழன் உலாவில் பெண்கள் வீதி போந்து விளையாடுவது சுட்டப் பட்டிருக்கின்றது.

'பொன்னின் புகார் முத்தின் அம்மனையும், தென்நாகை
நன்னித் திலத்தின் நகைக் கழங்கும் — சென்னிதன்
கொற்கைக் குளிர்முத்த வல்சியும் சோறடுகை
கற்கைக்கு வேண்டுவன கைப்பற்றிப் — பொற்கொடியார்
வீதி புகுந்து விளையாடும் எல்லைக்கண்—'

என்பது ஒட்டக்கூத்தர் வாக்கு. தெருவீதியில் பெண்கள் கூடி அம்மனை, கழங்கு, சிறுசோறடுதல் என்னும் விளையாட்டுகளில் ஈடுபடும் காட்சியை இங்குக் காண்கிறோம்.

அம்மானை ஆடியவகை

அம்மானையாடலைப் பெண்கள் எவ்வெவ்வகையாக நிகழ்த்தினர், எம்முறையில் நிகழ்த்தினர் என்பன போன்ற செய்திகள் குறித்து இனிப் பார்ப்போம். இவ்விளையாட்டு இப்பொழுது வழக்கின்றி இருப்பதால் இஃது இவ்வாறுதான் அமைந்திருந்தது என்று அறுதியிட்டுக் கூறுவதற்கு இல்லை. ஏதாவது ஒருபொருளை மேலே தூக்கி எறிந்து பிடித்துக்கொண்டு வரும்போது, 'என்ன அம்மானை விளையாட்டு?' என்று நாஞ்சில்நாட்டில் முதுவோர் வாயில் தோன்றுவதுண்டு. காய்களை மேலே எறிந்து பிடிப்பதுதான் அம்மானை ஆட்டம் என்பதனை அம் முதுவோர் வாய்ச் சொல் விளக்கும். 'அம்மானை தம் கையில் கொண்டு பெண்கள் தம் வீடுகளில் விளையாடினர்' எனவரும் சிலப்பதிகாரக் குறிப்பினால் அம்மானைக் காய்களைக் கைகளில் பற்றி விளையாடினர் என்பது தெளிவு.

அம்மானையாடும் பெண்கள் எத்தகைய நிலையிலிருந்து ஆடிப் பாடினர் என்பதனை,

'கையார் வளைசிலம்பக் காதார் குழைஆட,
மையார் குழல்புரள, தேன்பாய, வண்டுஒலிப்ப,
செய்யானை வெண்ணீறு அணிந்தானை, சேர்ந்தறியாக்
கையானை எங்கும் செறிந்தானை அன்பர்க்கு
மெய்யானை அல்லாதர்க்கு அல்லாத வேதியனை
ஐயாறு அமர்ந்தானைப் பாடுதும்காண், அம்மானாய்!'

எனவரும் திருப்பாடலில் (13)மணிவாசகர் சொற்சித்திரமாகத் தீட்டிக் காட்டியுள்ளார். மகளிர் அம்மானைக் காயை மேலே வீசி ஆடும் போது அவர்கள் அணிந்துள்ள வளைகள் ஒன்றோடொன்று மோதி ஒலி செய்கின்றனவாம். காய் செல்லும் திக்கை அவர்கள் நிமிர்ந்து நோக்குகின்ற நிலையில் அவர்தம் காதுகளில் அணிந்த குண்டலங்கள் ஆடுகின்றன. ஆட்டத்தின்போது அவர்களுடைய தலைகளும் அசைவதால், கூந்தல் அங்கும் இங்குமாகப் புரளுகிறது. இதனால் கூந்தல் மலர்களிலிருந்து தேன்சிந்துதலும், அத்தேனை உண்ணவரும் வண்டுகள் அங்கு மொய்த்து ரீங்காரம் செய்தலும் நிகழ்கின்றன. இவையெல்லாம் இயல்பாய் நிகழ்கின்ற செயல்களாகும். இத்தகு அம்மானை ஆட்ட விளக்கத்தால் மகளிருடைய கைக்கும் தலைக்கும் அசைவு அதிகம் நேர்கின்றது என்பது தெரியவரும். இத்தகைய

நிலே பெண்கள் கூடி, அமர்ந்து ஆடினுலும் நின்று ஆடினுலும் ஏற்படலாம். பெரும்பாலும் வீடுகளில் அமர்ந்து விளையாடுதலும் வீதிகளில் நின்று விளையாடுதலும் வழக்கமாயிருக்கலாம் போலும். இனி, இவ் விளையாட்டில் பாடும் பாடல்களின் அமைப்பினை நோக்குவோம்.

அம்மானை வரி

முதன்முதலாகச் சிலப்பதிகாரம் வாழ்த்துக்காதையில் 'அம்மானை வரி' என்னும் பகுதியில், மகளிர் அம்மானைக் காய்களை மேலே வீசியாடும் விளையாட்டில் பாடும் பாடற்பகுதியைக் காண்கிறோம். 'அம்மானை வரி' எனப்படும் இந்த இசைப்பாட்டு வினுவும் விடையுமாக மூவர் இணைந்து பாடும் முறையில் அமைந்துள்ளது.

'வீங்குநீர் வேலி உலகாண்டு விண்ணவர்கோன்
ஓங்கரணம் காத்த உரவோன்யார்? — அம்மானை!
ஓங்கரணம் காத்த உரவோன், உயர்விசும்பில்
தூங்கெயில் மூன்றெறிந்த சோழன்காண் — அம்மானை!
சோழன் புகார்நகரம் பாடேலோர் அம்மானை!'

என்பது தொடக்கமாக நான்கு பாடல்கள் இக்காவியத்தில் காணப்படுகின்றன. இவற்றுள் முதல் மூன்றும் வினுவும் விடையுமாகச் சோழன் புகார்நகரை மூவர் கூடிப் பாடும் பாங்கில் உள்ளன. மூன்றும் அடி மடக்காக அமைந்துள்ளது. முடிவு மூன்று பாடல்களிலும் பல்லவி போலச் 'சோழன் புகார் நகரம் பாடேலோர் அம்மானை' என்றே உள்ளது. நாலாவது பாடல் 6 அடிகளுடன் சற்று மாறுபட்டுக் காணப்படுகின்றது. ஆயினும், அம்மானை என்னும் விளி மூன்றுதான். ஆதலால் இதுவும் முந்திய பாடல்களை ஒத்த பாங்கினதே. மூவர் கூடிப் பாடியாடும் விளையாட்டிற்கான அம்மானைப் பாடல்களை 'மூவரம்மானை' என்றும் பின்னுளில் வழங்கலாயினர்.

மூவரம்மானையும் கலம்பக அம்மானையும்

மூவரம்மானையிலும் கலம்பகப் பிரபந்தத்தின் உறுப்பாக வரும் அம்மானைப் பாடல்களிலும் மேலே சுட்டிய வினுவிடை என்னும் நிலை மாறிக் காணப்படுகிறது. ஒருத்தி முதலில் ஒரு கருத்தைச் சொல்ல, அக்கருத்தையே வழிமொழிந்தாற்போல அதற்கு மற்றொருத்தி விளக்கம் வினுவ, மூன்றுமவள் அவ் வினுவிற்குரிய விடையினைச் சிலேடை நயம் பொருந்தக் கூறுவதாகக் காணப்படுகிறது.

'புந்திவனஞ் சூழும் பொருவில்லாப் பிள்ளையார்
தந்திமுகன் குடவயிற்றன் சப்பாணி — அம்மானை!
தந்திமுகன் குடவயிற்றன் சப்பாணி யாமாகில்,
இந்த வயிற்றுக்கு இரையெங்கே? — அம்மானை!
இன்றென்றே ஈசன் இரக்கலுற்றுன்—அம்மானை!

என்பது மூவரம்மானையின் முதற்பாடல்.

'தேனமருஞ் சோலைத் திருவரங்கர் எப்பொருளும்
ஆனவர்தாம் ஆண்பெண் அலியலர்காண்—அம்மானை!
ஆனவர்தாம் ஆண்பெண் அலியலரே யாமாகில்,
சானகியைக் கொள்வாரோ தாரமாய்?—அம்மானை!
தாரமாய்க் கொண்டதுமோர் சாபத்தால்—அம்மானை!'

என்பது திருவரங்கக் கலம்பகத்தில் காணும் அம்மானைப் பாடல். இப்பாடல்கள் சிலப்பதிகார அம்மானை வரிப்பாடல் போன்று வினவாகத் தொடங்கப்படவில்லை. ஆனால், மூன்றும் அடி மடக்காக அமைதல் காணத்தகும். இறுதியடியில் நயம் தோன்ற விடை பகர்ந்து முடிக்கும் முறை பின்னர் எழுந்த ஒரு மாற்று வளர்ச்சி.

அம்மானை—இலக்கணம்

இந்த இலக்கிய மரபினை நோக்கி அறுவகை இலக்கணம் தந்த வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகள், அம்மானைப் பாடலில் இடம் பெறும் மூவர்தம் பேச்சும் சொல்லல், மறுத்தல், விடை என்னும் முறைமையில் அமைந்திருக்கும் என இலக்கணம் வகுத்துரைக்கிறார். சுவாமிகள் தந்துள்ள அம்மானை இலக்கணம் வருமாறு :

'இரண்டு நாலைந் தெனுமடி ஈற்றில்
தன்பெயர் குலவத் தக்க அம்மானை
ஐந்தடிக் கலிப்பா போலும், அதனிடை
சொல்லலும் மறுத்தலும் விடையும்தானே
கூறினர் பற்பலர் குலவயத் திடத்தே.'

'அம்மானை யீற்றின் விடைமொழி யதனுள்
இருபொருள் காட்டல் மிகையாம், முப்பொருள்
நாற்பொருள் மொழியினும் இசைவுறல் நலமே!'

(யாப்பு. 29, 30)

அம்மானை அமைப்பின் வளர்நிலை

இவ்வாறன்றி மகளிர் விளியாக அம்மானை என்று அடிதோறும் ஈற்றில் அமையப் பாடினாரும் உளர். ஒட்டக்கூத்தர் சோழமன்னனுக்குப் பாண்டியராசனிடம் பெண் கேட்க வந்தபோது சோழ மன்னனின் பெருமையை அப்புலவர் எடுத்துரைத்தாக வரும், 'கோரத்துக் கொப்பாமோ கனவட்டம் அம்மானை' என்னும் பாடலில் அடிதோறும் அம்மானை என்பது காணப்படுகிறது. இப்பாடலுக்குப் பதிலாகப் பாண்டியன் பெருமையை எடுத்துக் கூறிய புகழேந்திப்புலவர் பாடலும் அவ்வாறே அமைந்துள்ளது.

யாப்பருங்கல விருத்தியில் நிலைவெளிவிருத்தத்திற்கு உதாரணமாகக் காட்டப்பட்டுள்ள பாடல் (சூ. 68),

'சேயரி நாட்டமுஞ் செவ்வாயு மல்குலுமோ —அம்மானாய்!
ஆய்மலருந் தொண்டையு மாழியந் திண்டேரும் —
[அம்மானாய்!

மாயிருந் தானை மயிடன் றலையின்மேல் — அம்மானாய்!
பாயின சீறடிப் பாவை பகவதிக்கே—அம்மானாய்!'

என்று அடிதோறும் 'அம்மானாய்!' என்னும் விளியுடன் காணப்படுகிறது.

பெண்பாற்பிள்ளைத் தமிழில் அம்மானைப் பருவம் என்னும் பகுதி ஒன்று உள்ளது. இதில் பாட்டுடைத் தலைவியை 'அம்மானை யாடியருளே' என்றும், 'ஆடுக அம்மனையே' என்றும் வேண்டிக் கொள்ளும் முறைமையில் பாடல்கள் அமைந்துள்ளன. உலா இலக்கியங்களிலும் மகளிருடைய விளையாட்டாக அம்மானை என்பது குறிக்கப்படுதல் காணலாம். தனிப்பாடல்களாகவும் அம்மானைப் பாடல்கள் சில உள.

திருவாசகத் திருவம்மானை

திருவாசகத்தின் ஒரு பகுதியான 'திருவம்மானை' சிவபெருமானின் திருப்புகழ்களைத் தொகுத்துரைத்துத் துதிக்கும் முறையில் உள்ளது.

'செங்கண் நெடுமாலும் சென்றிடந்தும் காண்பரிய
பொங்கு மலர்ப்பாதம் பூதலத்தே போந்தருளி
எங்கள் பிறப்பறுத்திட் டெந்தரமும் ஆட்கொண்டு
தெங்கு திரள்சோலைத் தென்னன் பெருந்துறையான்
அங்கணன் அந்தணனாய் அறைகூவி வீடருளும்
அங்கருணை வார்கழலே — பாடுதுங்காண் அம்மானாய்!'

என்பது இத்திருவம்மானையின் முதற்பாடல். இதில் உள்ள இருபது பாடல்களுள் ஒன்று தவிர எல்லாப் பாடல்களும் 'பாடுதும் காண் அம்மானாய்!' என்றே முடிவுறுகின்றன. பதினாறும் பாடல்மட்டும் 'கூறுதுங்காண் அம்மானை!' என்று உள்ளது.

இந்த அம்மானைப் பகுதியில் வினாவிடை முறை, மடக்கு என்னும் மூவர் அம்மானைப் பாடலமைப்பு மாறிப் பெண்கள் கூடித் துதிபாடும் வகையில் பாடல்கள் அமைந்துள்ளமை காணலாம். இதன் வளர்நிலைதான் கதைப்பாடல்களாக வரும் அம்மானைப் பாடல்கள். இவற்றை ஆங்கிலத்தில் வழங்கும் பாலட் (Ballad) என்பதனோடு ஒப்பிடலாம் என்பர்.

கதையம்மானை

இந்தக் கதையம்மானைப் பாடல்கள் மக்களின் வாய்மொழி இலக்கியம் போல எளிய பேச்சு நடையில் காணப்படினும் மோனை நயமும் அடுக்குத் தொடர் அழுத்தமும் அமையப் புலவர் படைத்த படைப்புகளே. கதையமைப்பில் பயன்படுத்தப்பட்டு வரும் பாடலைக் கலிப்பாவின் வளர்ச்சியாகும் என்கிறார் வண்ணச் சரபம் தண்டபாணி சுவாமிகள்.

'கலிப்பா அரையரை யாகக் கூட்டியும்
எதுகை யின்றித் தனித்தனி சேர்த்தும்
காதை யம்மானை கழறினர் சிலரே' (அறு. யாப்பு. 31)

எனக் கதையம்மானைப் பாடலின் நிலையினைச் சுவாமிகள் எடுத்தோதுகின்றார்கள். இதனைச் சிலர் தரவுகொச்சகமாய் நாற்சீர் கொண்டு அமைவது என்றும் கருதுகின்றனர். இவ்வாறு கொச்சகச் சீர்கொண்டு பாடுதல் சிறப்புடையதன்று என்றும் சுவாமிகள்,

'கொச்சகச் சீர்கொடு கூறுமம் மானை
இழிவின தாகுமென் றிசைப்பது துணிவே'
(அறு. யாப். 32)

என்னும் நூற்பாவில் சுட்டுகின்றார்கள். எனவே, அம்மானைக் கதைப் பாடல்கள் வெண்கலிப்பா நடையினவாய் வருதல் சிறப்பாகும் என்பது தெரியவரும்.

கதையம்மானை நூல்கள் சிலவற்றின் பெயர்களிலேயே அம்மானை என்னும் பெயர் இணைந்துவரக் காண்கிறோம். சிற்சில நூல்களில் அம்மானை என்பது விளியாய்ப் பாடலின் இடையிடையே அமைந்து காணப்படுதலும் உண்டு. இத்தகு இடங்கள் கதையின் போக்கு மாற்றத்தைச் சுட்டும் இடங்களாகவும் விளங்கும். இவ்வாறு அம் மானை என்பது இடம் பெறுது வரும் கதைப் பாடல்களையும் அம் மானை என்றே கொள்வர். இவ்வகை நூல்களுக்குக் 'கதை' என்றும், 'மாலை' என்றும் பெயர் சூட்டினாரும் உளர். 'நங்கைப் பாட்டு' என்றும் இதனைச் சிலர் வழங்கியுள்ளனர்.

'ஸ்ரீ காமாட்சியம்மன் பேரில் அம்பாவை' என ஒரு புராணக் கதைப்பாடல் சுவடியைக் கவிஞர் மு. கோ. இராமன் அவர்கள் டாக்டர் உ. வே. சாமிநாதையர் நூலகக் கருவூலத்திலிருந்து அண்மையில் கண்டெடுத்து அறிவித்துள்ளார்கள். இந்நூலின் இடையிடையே வரும் விளிகள் 'அம்பாவாய்' என்று உள்ளன. எனவே, அம்மானையமைப்பில் பாடப்பெறும் பாடல்வகைக்கு 'அம்பாவைப் பாடல்' என்பது மற்றொரு பெயர் வழக்காகக் காணப்படுதல் தெரிய வருகிறது.

அம்மானைப் பாடல்களின் ஆதிகருத்தா

அம்மானைப் பாடல்களின் ஆதிகருத்தா புகழேந்திப் புலவர் ஆவர் என்பது செவிவழிச் செய்தி. விநோதரச மஞ்சரியில் அட்டாவதானம் வீராசாமிச் செட்டியார் இந்தச் செவிவழிச் செய்தியைத் தெரிவித்திருக்கிறார். கவிச்சக்கரவர்த்தி ஒட்டக்கூத்தருக்குச் சோழரவையில் வந்து சேர்ந்த பாண்டிநாட்டுப் புலவர் புகழேந்தியிடம் பகைமை இருந்தது என்றும், அதன் காரணமாகச் சோழமன்னரைக் கொண்டு அவரைச் சிறையிடுவித்தார் என்றும் சொல்லப்படுகிறது. புகழேந்திப் புலவர் சிறைப்பட்டிருந்த கூடத்தின் பக்கத்தில் பெண்கள் வந்து தண்ணீர் எடுத்துச் செல்லும் கிணறு இருந்ததாம்.

அங்கே வரும் பெண்கள் மகிழுமாறு அவர் அம்மானைக் கதைப் பாடல்கள் பலவற்றைப் பாடியளித்து அப்பெண்பாலரின் போற்று தலைப் பெற்றார் என்பர். இச்செவிவழிச் செய்தி எவ்வாறாயினும் கதைப்பாடல்களை ஆக்கியவர் புகழைத் தாங்கியவராகிறார் என்பதில் ஐயமில்லை. நாடோடியாக மக்கள் வழக்கில் அமைந்த பாடல் வகையே இது என்பது தெளிவு. இந்நடைக்குக் காலவரையறை கூறல் இயலாது. இது மக்கள் வாழ்வோடு இரண்டறக் கலந்து வருவது.

அம்மானைப் பாடலின் பாடுபொருளும் பாகுபாடும்

அம்மானைக் கதைப்பாடல்களுள் பெரும்பாலனவும் பாரதம் இராமாயணம் என்னும் இதிகாசப் பகுதிகளையே பாடுபொருளாகக் கொண்டுள்ளன. புராணக்கதைகள், அடியார் சரித்திரங்கள், மற்றும் நாடோடிக்கதைகள் முதலியனவும் எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளன. வரலாற்று நிகழ்ச்சிகளின் அடிப்படையிலும் சிற்சில அம்மானைகள் உள. அல்லியரசாணி மாலை, பவளக்கொடி மாலை, அபிமன்னன் சுந்தரிமாலை, பஞ்சபாண்டவர் வனவாசம், வைகுந்த அம்மானை, இராமாயண நங்கைப்பாட்டு முதலியவை முதலில் கூறிய வகையைச் சாரும். சித்திரபுத்திர நயினார் கதை, அமராவதி கதை, சிறுத் தொண்டன் கதை, நல்லதங்காள் கதை, புவனேந்திரன் அம்மானை முதலியன இரண்டாவது குறிப்பிட்ட வகைக்கு எடுத்துக்காட்டு களாம். சிவகங்கை அம்மானை, இராமப்பய்யன் அம்மானை, தேசிங்குராஜன் கதை, மதுரைவீரன் அம்மானை முதலியன வரலாற்று நிகழ்ச்சிகளை அடிப்படையாகக் கொண்டு அமைந்தவை. இவற்றைப் பொதுவாக இதிகாசபுராண அம்மானை, வரலாற்று அம்மானை என்று இரு பெரும் பகுப்பினுள் அடக்கிக் காணலாம்.

இலக்கிய அம்மானை

இவ்விருவகையேயன்றிப் பண்டை இலக்கியங்களைப் பின்பற்றி, அவற்றின் கதைப்பொருளைத் தெளிவாக மக்களுக்குத் தெரிவிக்கும் நோக்கிலும் சிற்சில நூல்கள் தோன்றியுள்ளன.

சிலப்பதிகாரக் கதைக் தலைவனுகிய கோவலன் சரிதத்தை அம் மானைப் புலவர் 'கோவிலன் கதை' என்று பாடியிருக்கிறார். ஆனால், மூல நூலின் போக்கிலிருந்து முரண்பட்ட செய்திகள் சிலவற்றைக் கொண்டதாயும் புலவர்தம் கற்பனைத்திறத்தால் புகுந்த சில நிகழ்ச்சிகளை உள்ளடக்கியதாயும் இக்கதை அம்மானை அமைந் துள்ளது. இறுதியில் கண்ணகியைக் காளிதேவியாக, திருவொற்றி யூர்த் திருக்கோயிலினுள் திகழும் வட்டப்பாறை அம்மனாக இப் புலவர் ஆக்கிவிடுகிறார்.

இந்தப் புலவரைப் போலாது இலக்கியக் கதைப் போக்கு நன்கு விளங்கும் வகையில் அமைந்த அம்மானை நூல்களும் சில உள. அவற்றுள் சீவகனம்மானை, மேருமந்தரமாலை என்பன சிறப்பாகக்

குறிப்பிடத் தக்கன. சிந்தாமணிக் காவிய நாயகனுகிய சீவக நம்பி யின் சரிதம் பற்றிய அம்மானேச் சுவடிகள் கேரளப் பல்கலைக்கழகச் சுவடி நிலையத்திலும் தஞ்சாவூர்ச் சரஸ்வதி மகாலிலும் காணப்படு கின்றன. தஞ்சைச் சுவடியைப் புலவர் வீ. சொக்கலிங்கம் அவர்கள் பதிப்பிக்க முயன்று வருகிருர்கள். கேரளச் சுவடிகளை டாக்டர் நாச்சிமுத்து அவர்கள் ஆராய்ந்து வருவதாகத் தெரியவருகிறது. இந் நூல் வெளிவந்தால் இலக்கியக் கதைப்பகுதியை அம்மானை ஆசிரியர் எந்த அளவில் எளிமைப்படுத்தித் தந்துள்ளார் என்பது தெரிய வாய்ப்பாகும். ஆங்கில மகாகவி மில்டனுர் பாடிய 'சுவர்க்க நீக்கம்' என்னும் காவியத்தைத் தழுவிப் புலவர் சாமுவேல் வேத நாயகம் தாமஸ் என்பார் பாடியுள்ள 'பூங்காவனப் பிரளயம்' என்னும் அம்மானையையும் இலக்கிய அம்மானை என்று கொள்ள லாம். இப்பொழுது வெளியிடப்பெறும் இந்த மேருமந்தரமாலையும் ஓர் இலக்கிய அம்மானையே.

நூலாசிரியர் வரலாறு

மேருமந்தரமாலையின் இறுதியில் சிறப்புப் பாயிரம் போல அமைந்துள்ள 'மாலைமொழி அகவல்' என்னும் ஓர் அகவற்பா காணப்படுகிறது. இந்தப் பாடலில் ஆசிரியர் பற்றிய சிலசெய்திகள் உள. ஸ்ரீ வாமனந்தாச்சாரியார் 1406 பாடலில் வழங்கியருளிய மேருமந்தரர் சரிதத்தைக் கற்ருர் மற்ருர் எல்லோரும் கற்றுக் களிக் கும்வண்ணம் மாலையாய்ப் பாரீசுவநாதன் தந்தார் என்பது இப் பாடல் தரும் செய்தி. இதுதவிரப் பாரீசுவநாதனின் ஊர், தந்தை பெயர் இரண்டையும் இப்பாடல் தெரிவிக்கின்றது.

'செய்யாள் உறையும் செழுநலூர்க் கிராமத்து
இயல்பாய் வாழும் பட்டணம் அப்பாசாமி
நயினுர் குமாரன் பாரீசுவ நாதன்
அன்பர்க் கன்பன் அறநெறி தவிரான்'

என்று இவர் போற்றப்பட்டுள்ளார். இங்குக் குறிப்பிடும் நல்லூர் என்பது வடஆர்க்காடு மாவட்டத்தில் உள்ளது. ஜைன இளைஞர் மன்றச் செயலர் திரு. தன்யகுமார் அவர்கள் இங்குச் சென்று தேடி யதில் இவருடைய குடும்பத்தார் பற்றிய தகவல்கள் கிட்டவில்லை. இவர் சில தலைமுறைகளுக்கு முற்பட்டவராயிருத்தல் வேண்டும் என்று ஊகிக்கலாம். இவருடைய தந்தை பெயர் அடைமொழியைப் பார்க்கும்போது அவர் சென்னைப் பட்டணத்திலிருந்து அந்தக் கிரா மத்திற்குச் சென்று குடியேறியவர் என்று கருத இடமுண்டு. 'நயினுர்' என்பது சைன சமயத்தைச் சார்ந்தவர் பெயருடன் இணைந்து வரும் சிறப்புப் பெயராகும். நூலாசிரியர் இருபத்து மூன்ரும் தீர்த்தங்கராகிய பார்சுவநாதரின் திருப்பெயரைப் பெற்றுள்ளார். இவர் வழிவழியாக வரும் சைன சமயக் குடும்பத்தில் வந்தவர் என்பதும் அச்சமய நூல் களில் பெரிதும் ஈடுபாடு கொண்டு கற்றவர் என்பதும் தெளிவு. பெருங்காவியமாக விளங்கும் மேருந்தரபுராணத்தைப் பின்பற்றிப் பெண்களும் பிறரும் பாடத்தக்க அம்மானைக் கதைப்பாடல் நடை

யில் தம் நூலை ஆக்கியுள்ளார். இரண்டாவது ஏடு இவர் ஊரை, 'செய்யாளுறையும் செழும்புதுக் காமூர்' என்று குறிப்பிடுகிறது. புதுக் காமூர் என்னும் ஊரும் வடஆர்க்காடு மாவட்டத்தில் உள்ளது. இவற்றுள் எந்த ஊர் ஆசிரியர் பிறந்த ஊர் என்பதும், ஆசிரியரைக் குறித்த பிற செய்திகளும் அந்த இடங்களுக்கு நேரில் சென்று பல் வேறு வகையில் ஆய்வு நிகழ்த்தினுல் ஒருகால் தெளிவுறத் தெரிய வருதலும் கூடும்.

இந்நூலாசிரியரின் காலத்தைத் திட்டவட்டமாக வரையறுத் துணர்தற்குத் தக்க சான்றுகள் கிட்டவில்லை. அம்மானை நடையில் அமைந்த கதைப்பாடல்களுள் பெரும்பாலனவும் கி.பி. 17, 18ஆம் நூற்றுண்டுகளில் தோன்றியுள்ளன. ஆகவே, இம் மேருமந்தர மாலை யும் 18ஆம் நூற்றுண்டைச் சார்ந்ததாகலாம்.

மேருமந்தரமாலை

இவ்வாசிரியர் மூலக்காவியத்தில் உள்ள துதிகள், சமய தத்து வங்கள், தர்ம விளக்கங்கள் ஆகியவற்றை விடுத்துக் கதைப்போக் கினை மக்களின் வழக்கு மொழியில் வளமாக அமைத்துத் தந்துள் ளார்.

'மேருமந்தரப் பொருளை மிகவான செந்தமிழில்
மாதவத் தானுயர்ந்த மாமுனிவர் சொன்னதமிழ்
ஆயிரத்து நானூற்று ஆறுமந் திரமாகச்
சொன்ன சரிதத்தைச் சுருக்காய் உளம் பொருந்த
மாலைய தாக மனம்மகிழ்ந்து பாடலுற்றேன்'

என்கிருர் ஆசிரியர் பாரீசுவநாதன். நூலின் கதைப்பொருளை விடாது முற்றுமாய்ப் பாடல் வடிவில் அமைத்துள்ள பாங்கு சிறப்பாக உள்ளது.

சருக்க அமைப்பு

மேருமந்தர புராணம் 13 சருக்கங்கள் கொண்டது. இவற்றுள் முதல் ஆறு சருக்கப் பிரிவுகளை அப்படியே கொண்டு மாலையாசிரியர் பாடியுள்ளார். அதன்பின் சருக்கப் பிரிவு குறிப்பிடப்படவில்லை. பிற்பகுதிகளை ஒருசேரத் தொகுத்துப் பாடியுள்ளார். இதில் 7வது சருக்கம் முதற்கொண்டு நூல் முடியவுள்ள கதைப்பகுதிகளைக் காண லாம்.

மூலநூல் மொழிகளை அடியொற்றி அமைத்தல்

கதையமைப்பில் மட்டுமன்றிக் கதையை நடத்திச் செல்லும் முறையிலும் மூலநூலாசிரியர் வாக்குகளைப் பல இடங்களில் தம் பாநடைக்கு ஏற்ப மாலையாசிரியர் மாற்றி அமைத்துக் கொள்கிருர். உவமைகள், பாத்திரங்களின் பேச்சுகள், உலகிற்கு உணர்த்தும்

பொது உண்மைகள் முதலியனவும் மூலநூலின் மாற்றுருவமாகவே காணப்படுகின்றன.

'கற்பில்லா மகளிரில்லை கருணையில் லாருமில்லை' (மேரு. 10)

என்ற புராணச் செய்யுளடி.

'கற்பில்லா மாதரில்லை கருணையில்லா மைந்தரில்லை' (மாலை. 40)

என்று மாலையில் மாற்றுருப் பெறுகிறது.

வைசயந்தனின் குமாரர்கள் சஞ்சயந்தனும் சயந்தனும் தம் தந்தையின் அரசை ஏற்றுக் கொள்ளாது தவநெறியில் பற்றுக் கொள்ளவே, அரசன் வைசயந்தன் தன்பெயரனாகிய சஞ்சயந்தனின் மகன் வைசயந்தனை அரசனாக்கி முடிசூட்டித் துறவு பூணுகிறான். இந்த இடத்தில் வாமன முனிவர்,

'கானப்போ ரேற்றின் பாரங்
கன்றின்மே லிட்ட தேபோல்
தேனொத்த முடியை மன்னன்
சிறுவன்றன் சிறுவற் கீந்தான்' (மேரு. 121)

என்று உரைப்பர். இவ்வுவமையினையே அம்மானைப் பாடலாசிரியரும் கொண்டு,

'ராச்சியமும் செய்யவினி நம்மால் முடியாதென்று
சஞ்சயந்தன் மைந்தன் சற்குணனும் வைசயந்தன்
அவனரசு செய்யவென்று அன்புடனே மூவோரும்
காளை சுமக்குமந்தக் கனபாரந் தன்னையப்போ
கன்றின்மே லிட்டதுபோல் கனக முடிதரித்தார்
மூவரும் தான்துறந்து முனிவர்களு மானார்கள்'

(மேரு. 96-101)

என்று பாடுகின்றார். இவ்வாறே பெரும்பாலான இடங்களில் மூல நூலாசிரியரின் மொழிகளை அடியொற்றியே மேருமந்தரமாலை அமைந்துள்ளது.[1]

பதிப்பிற்குப் பயன்பட்ட சுவடிகள்

1978ஆம் ஆண்டு ஜூன் மாதம் நான் தஞ்சாவூர்ச் சரஸ்வதி மஹால் நூல் நிலையத்திற்குத் திவாகரச் சுவடிகளைப் பரிசோதிக்கச் சென்றிருந்தேன். அப்பொழுது ஒருநாள் எனக்கு முன்பே அறிமுகமாகியிருந்த திருவாளர் ஜிநகுமார்-ராஜலக்ஷ்மி அம்மையார் இல்லத்திற்குச் சென்றிருந்தேன். அவர்களிடமுள்ள ஏட்டுப் பிரதிகள், கையெழுத்துப் படிகள் முதலியவற்றையும் அண்மையில் உள்ள

---

1. நூலுள் அடிக்குறிப்புப் பகுதியில் முதல் நூலோடு ஒத்து வரும் இடங்கள் அங்கங்கே சுட்டப்பட்டுள்ளன.

சைனப்பள்ளியில் சேமித்து வைக்கப்பட்டுள்ள சுவடிகளையும் பார்வையிட வசதி செய்து தந்தார்கள். அங்கே சைனசமய சம்பந்தமான ஆகம சாத்திரச் சுவடிகள் தமிழிலும் கிரந்தலிபியிலுமாகப் பல உள்ளன. அவற்றையெல்லாம் பார்வையிட்டபோது இந்த மேரு மந்தரமாலைச் சுவடி கிட்டியது. இப்படி ஒரு நூல் உண்டு என்பது எனக்கு அதற்கு முன் தெரியவராது. சுவடியை மேலோட்டமாக ஆராய்ந்ததில் அது மேருமந்தர புராணத்தின் வழிநூலாய் அமைந்தது என்பதும் நூல் முழுமையாய் உள்ளது என்பதும் தெரியவந்தது. அதனை அச்சிட்டு வெளிப்படுத்த ஆவன செய்வதாகச் சொல்லவே அவர்கள் மனமுவந்து சுவடியை அளித்தனர். அதன் விளைவாகவே இப்பதிப்பு இப்பொழுது வெளிவருகிறது. எனவே, அவர்களுக்கு என் நன்றி முதற்கண் உரித்தாகும்.

இந்தச் சுவடி இப்பதிப்பிற்குப் பயன்பட்ட முதற்சுவடி. 46 இதழ்கள் கொண்டது; இருபுறமும் எழுதப்பட்டிருக்கிறது. இச்சுவடியினை எழுதியவர் திருப்பரம்பூர் ஸ்வஸ்திஸ்ரீ தர்ம ஸாகர ஸாமியார் என்னும் குறிப்பும் சுவடியின் இறுதியில் காணப்படுகிறது. முனி ஸ்ரீ தர்மசாகரர் 1940-ல் சிரவண பெல்கோலாவில் தமது சல்லேகனம் என்னும் வடக்கிருத்தலை நிறைவேற்றிக்கொண்டார். இவரால் எழுதப்பட்ட இந்த ஏடு 1900-க்கு முற்படப் பிரதி செய்திருத்தல் கூடும்.[1]

ஓர் ஏட்டை மட்டும் கொண்டு நூலைச் சரிவரப் பதிப்பிடுதல் மிக அருமை; இதனைத் தெளிவுபடுத்த வேறொரு ஏடாவது இருத்தல் வேண்டும், எனவே, மேருமந்தரமாலைச் சுவடி வேண்டிச் சென்னை ஜைன இளைஞர் சங்கத்தார் வெளியிட்டு வரும் 'முக்குடைத் திங்கள் இதழில்' ஆவணி மாதம் ஓர் வேண்டுகோள் விடுத்திருந்தேன். இதனைக் கண்ட உயர்திருவாளர் வெள்ளிமேடுபேட்டை காங்கேய நயினார் அவர்கள் தம்மிடம் பிரதி இருப்பதாகத் தெரிவித்துத் தபால் வழி அதனை அனுப்பிவைத்தார்கள். இதுவே இப்பதிப்பிற்குத் துணையான 2ஆம் ஏடு. இவ்வேட்டினால் மூலபாடம் பற்பல இடங்களில் தெளிவுபெற்றன. நூல் நல்லுருவம்பெறத் துணைநின்ற இவ்வேட்டினை உதவிய காங்கேய நயினார் அவர்களுக்கு என் நன்றி உரியது. இந்த ஏடு, திரு. காங்கேய நயினாரின் தகப்பனார் திரு.அ. ஜீவேந்திர நயினார் என்பாரால் அவருடைய சகோதரி மேகமாலை அம்மாளுக்காக எழுதித்தரப்பட்டது.[2] இவ்வேடு எழுதி 52 ஆண்டுகள் ஆகின்றன. இச் செய்திகளைத் தெளிவித்ததோடு தம்மிடமிருந்த சுவடியையும்

---

1. "துன்மதி வருஷம் அர்ப்பசி மீ 5உ சனிவாரதினம் உத்தர நக்ஷத்திர தினத்தில் மேருமந்தரமாலை பூர்த்தியை, திருப்பரம்பூர் ஸ்ரீ தர்மஸாகர ஸ்வாமியாரால் எழுதி முடிந்தது."
2. "பிரபவ ஹு ஆனி மீ 10உ ஆதிவாரம் வெள்ளிமேடு பேட்டை அ. ஜீவந்தர நயினார் குமாரத்தியாகிய மேகமாலை வாசிக்கின்ற மேருமந்தரமாலை."

தந்து உதவிய வெள்ளிமேடுபேட்டை காங்கேய நயினார் அவர்களுக்கும் என் நன்றி உரித்தாகும்.

இதன் பின்னர் ஜைன இளைஞர் மன்றத்தினர் அரசாங்கச் சுவடி நிலையத்தில் உள்ள பிரதியைப் பார்த்து எழுதி வைக்கப் பெற்றிருந்த நகல் பிரதியை அளித்தார்கள். இதில் நூல் முழுமையும் இல்லை. 892 அடிவரையுள்ளது. இக்காகிதப் பிரதியை 3ஆம் ஏடாக இப்பதிப்பிற்குப் பயன்படுத்தியுள்ளேன். இந்தச் சுவடியும் சிற்சில பகுதிகளின் உண்மையுருக் காண உதவியது. இதற்கு மூலமான அரசாங்கச் சுவடி நிலையப் பிரதியையும் (R. 329) சென்று பார்வையிட்டேன். அதுவும் காகிதப் பிரதியே. 1916—1917ஆம் ஆண்டுகளில் வில்லியம் பாக்கம் வி. எஸ். கோபாலச்சாரியாரிடமிருந்து சுவடி பெற்றுப் பிரதி செய்து வைத்துள்ளதாக அதில் குறிப்புக் காணப்படுகிறது.

இந் நூல் அச்சாகி முடியும் தருவாயில் ஆலக்கிராமம் A. வஜ்ஜிர வாகு ஜைன் அவர்கள் வழியாகக் காகிதப் பிரதி ஒன்றனை ஜைன இளைஞர் மன்றத்தினர் பெற்றுத் தந்தனர். இப் பிரதியில் கண்ட வேறுபாடுகளையும் தொகுத்து, 'புதிய பிரதி' என்னும் தலைப்பில் நூலின் இறுதியில் ஓர் இணைப்பாகச் சேர்த்துத் தந்துள்ளேன்.

இச் சுவடிகளுக்கு எல்லாம் மூலமாகவும் சில பிரதிகள் நாட்டிலிருந்திருக்க வேண்டும். அவை நமக்கு இன்று எளிதில் கிட்டுகிற படியாயில்லை. காகிதப் பிரதியைத் தந்தும் இந்நூலைப் பரிசோதித்து வெளியிடுவதில் ஊக்க மூட்டியும் வந்த சென்னை இளைஞர் மன்ற அன்பர்களுக்கும் என் நன்றி உரித்தாகுக.

நூல் அமைப்பு முறை

மேருமந்தரமாலை நூல் 994 அடிகள் கொண்ட ஓர் அம்மானைக் கதைப்பாடல். மூலபாடத்தில் ஏட்டில் கண்டவாறே சருக்க அமைப்புகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. கதை செல் போக்கினைத் தெளிவாய்த் தெரிந்து கொள்ளும் வகையில் தலைப்புகள் அங்கங்கே வேண்டும் இடங்களில் தரப்பட்டுள்ளன. முதல் ஏட்டுடன் பின் கிடைத்த இரு பிரதிகளை ஒப்புநோக்கி ஆராய்ந்ததில் பாடபேதங்கள் பல காணப்பட்டன. பொருத்தமான, தெளிவான பாடங்களை மூலப் பகுதியில் கொண்டு ஏனையவற்றை அடிக்குறிப்பில் அமைத்துத் தந்துள்ளேன். மேருமந்தர புராணத்துடன் ஒத்துவரும் கருத்துகள் முதலியவற்றையும் அடிக்குறிப்பில் அங்கங்கே உடன் காட்டியுள்ளேன்.

இந்நூலின் பிற்சேர்க்கையாகச் சேர்க்கப்பட்டுள்ள கதைமாந்தர் வரலாறு, அரும்பதம் முதலியவற்றின் அகராதி, அரும் பொருள் விளக்கம் ஆகியவை நூற்பொருளை மேலும் நன்கு விளங்கிக் கொள்ளத் துணைசெய்வனவாம். இவற்றுள் அரும்பொருள் விளக்கம் என்னும் பகுதியை எழுதி உதவிய சைன சமய சாத்திரங்களில் வல்லவரும் 'ஆத்ம தர்மம்' என்னும் திங்கள் இதழை வெளியிட்டு வருப

வருமான உயர்திரு பரதசக்கரவர்த்தி ஜெயின் சாஸ்திரியார் அவர்களுக்கு என் நன்றியும் வணக்கமும் உரியனவாகுக.

நன்றியுரை

இப்பதிப்பிற்கு மூலமான சுவடிகள் தந்துதவிய அன்பர்களுக்கு மீண்டும் நன்றி கூறுகிறேன். ஏட்டுப் பிரதிகளை என்னுடன்கூட இருந்து பரிசோதிக்க உதவிய அன்பர் டாக்டர் உ. வே. சாமிநாதையர் நூலகத்தின் உதவிக்காப்பாளர் கவிஞர் மு. கோ. இராமன் அவர்களாவர். அவர்களுக்கும் இவ்வெளியீட்டுக்கு உறுதுணையாயிருந்து ஊக்கம் தந்த தமிழ்த்துறைத் தலைவர் டாக்டர் சி. பாலசுப்பிரமணியன் அவர்களுக்கும் மற்றும் அன்பர்களுக்கும் என் உளமார்ந்த நன்றி.

தமிழாழ்வு எட்டாம் தொகுதியில் வெளிவரும் மேருமந்தர புராணத்தின் வழிநூலாகிய இந்த இலக்கிய அம்மானையைத் தனி நூலாகவும் வெளியிட வாய்ப்பளித்த துணைவேந்தர் பெருந்தகை ஜி. ஆர். தாமோதரன் அவர்களுக்கும் சென்னைப் பல்கலைக் கழக ஆட்சிக்குழுவினருக்கும் தமிழுலகம் என்றும் நன்றி செலுத்தும் கடப்பாடுடையது.

மு. சண்முகம் பிள்ளை

பொருளடக்கம்

1.	வைசயந்தர் முத்திச் சருக்கம்	...	1
2.	சஞ்சயந்தர் முத்திச் சருக்கம்	...	6
3.	பத்திரமித்திரன் அறங்கேள்விச் சருக்கம்	...	9
4.	பூரணசந்திரன் சருக்கம்	...	18
5.	நால்வரும் சுவர்க்கம் அடைந்த சருக்கம்	...	21
6.	நால்வரும் புக்க சருக்கம்	...	27
7.	செல்லுங் கதை	...	32
	பவாவளி சரிதம்	...	45
	மாலைமொழியகவல்	...	47
	கதை மாந்தர் வரலாற்றுச் சுருக்கம்	...	48
	சிறப்புப்பெயர் முதலியவற்றின் அகராதி	...	57
	புதிய பிரதி	...	65
	அரும்பொருள் விளக்கம்	...	69

மேருமந்தர மாலை

முதலாவது
வைசயந்தர் முத்திச் சருக்கம்

பாயிரம்

திங்கள் மழைபொழிய திருநாடு தான்செழிக்க
எங்கள் அருகனறம் எங்கும் தழைத்தோங்க
செங்கோல் செழிக்க ஜினதர்மம் தான்விளங்க
புங்கவனற் கிருபையால் புனிதர் உளங்களிக்க
வீராதி வீரனெங்கள் விமலன் அடியிணையை
நாளும் வணங்கியேயான் நற்சுருத மாதவரைப்
போற்றிப் பணிந்துமிகு புண்ணிய தத்துவத்தீர்!
மேருமந்தரப் பொருளை மிகவான செந்தமிழால்
மாவத் தானுயர்ந்த மாமுனிவர் சொன்னதமிழ்
ஆயிரத்து நானூற் றுறுமந் திரமாகச்
சொன்ன சரிதத்தைச் சுருக்காய் உளம்பொருந்த
மாலைய தாக மனம்மகிழ்ந்து பாடலுற்றேன்.

அவையடக்கம்

சிப்பிக்குள் முத்தைச் செகத்தோரும் கொள்வார்போல்
அற்பமொழி ஈதென்று அறிவுள்ளோர் தாம்பழியார்
நற்கதைக ளின்பொருட்டு நற்புலவோர் தாம்கொள்வார்.

விதேகத்துள்ள கந்தமாலினி நாடு

நாவலந் தீவுதனில் நடுவில் மகமேரு
மேருவுக்குத் தானடுத்த மேற்குவிதே கந்தன்னில்

---

1. மழைபொழிக ; 2. தழைத்தோங்கும் ; 3. செங்கோல் செழிக்கச் சீர்நாடு தான்செழிக்க, சீர்நாடு தான்விளைக ; 4. புங்கவன் கிருபையால் ; 6. நச்சுருத மாதவரை ; 7. பணிந்து மிகும் ; 8. மேருமந் திரப்பொருளை, மேருமந்தரர் பேரருளை ; 9. மாதவந் தானுயர்ந்த, மாதவந் தானுயர்ந்து ; 12. மனம்மகிழ்ந்து பாடலுமே ; 13. சிப்பிகொள் முத்தை, ஜெகத்தோர்கள் ; 14. தான்பழியார்; 15. தான்கொள்வார் ; 16. தீவுதன்னில், மகம்மேரு;

சீராருஞ் சீதோதா நதிக்கு வடகரையில்
கந்தமா லினியென்னும் கருணையுள்ள தந்நாட்டின்
நன்மை மிகுமொழிய நம்மால் முடியாது
ஆனால் அதில்சிறிது அறிவாகச் சொல்லுகிறேன்.

கந்தமாலினி நாட்டுச் சிறப்பு

அசோக மிகுவனமும் அமலனிட ஆலயமும்
பூங்கா வனமும் புனுகுசவ் வாதுகளும்
தெங்கும் பலாவும் தேமா புளிமாவும்
கற்பக விருட்சம்பத்து கருதியதைத் தான்கொடுக்கும்
நவரத்தி னங்களும் நவநிதியும் தான்விளங்கும்
செந்நெல் செழிக்கும் ஜினதர்மம் தான்விளங்கும்
மூவுல கோர்துதிக்கும் மும்மதிலைச் சூழ்ந்தபொன்னை
என்றும் விளங்குநந்தம் இறைவனதில் வீற்றிருப்பான்
தத்துவம் ஓதும் தவராசர் வீற்றிருப்பார்
பவங்கள் அறிந்துவெகு பாவங்கள் தீர்த்திடுவார்
அருந்தவமுஞ் செய்வார் அவதியும் தான்பெறுவார்
காதியைத் தானறுப்பார் கருமங்கள் தான்கெடுப்பார்
நவகோடி மாமுனிகள் நன்முத்தி தான்பெறுவார்
சிராவகா சாரங்களும் சையமும் வேணதுண்டு
சீலமும் நற்றவமும் செய்வார்கள் நன்னெறியால்
காலையும் மாலையும் கடவுளடி தொழுவார்
ஆகமந் தானறிவார் அல்லும் பகலுமவர்
சாரணர்க்குத் தானளிப்பார் சருவும் பலவகையும்
கற்பில்லா மாதரில்லை கருணையிலா மைந்தரில்லை
வேற்றிலிங் கமுமில்லை விருதமில்லா தாருமில்லை
நால்வகைத் தேவர்களும் நாளுமிதில் வந்திருப்பார்
நீரணி நாட்டுக்கிது நிகரென்று சொல்லிடுவார்
இன்னம் பலவுமிதில் இன்பங்க ளுளநாட்டில்—

வீதசோகபுர நகரச் சிறப்பு

குறைவில்லா வீதசோகம் குபேரனது பட்டணம்போல்
வெற்றி யுடையதான வீதசோ கபுரமாம்

---

18. சீருஞ், சீருறும்; 19, கந்தமாலனி, கருணையுள்ள தன்னாட்டின் 21. சொல்லலுற்றேன்; 22. ஆலயமும்; 23. புனுகுச் சவ்வாது; 24. தேங்கும் பிலாவும்; 25. காவக விருட்சம், குடுக்கும்; கொடுக்கும் என வரும் இடங்களிலெல்லாம் குடுக்கும் என்றே பிரதிகளில் காணப்படுகிறது; 27. சென்னல்; தான்செய்வார்; 28. மும்மதிளைச்; 29. எங்கும் விளக்குநித்தம், இறைவனத்தில் வீற்றிருப்பார்; 30. தவராஜர்; 31. அரிந்துவெகு; 32. அருந் தவஞ் செய்வர்கள்; 35. சையமமும் வேணதுண்டு, செய்யமமும், மேரு. 544; 37. மேரு. 20; 39. சரவும்; 40. கருணையில்லா, மேரு. 10; 41. விரதமில்லா; 42. மேரு. 24; 44. இன்பங்க ளுள்ளநாட்டில்; 45. மேரு. 26; 46. வெற்றியுடையான்;

இஞ்சிமஞ் சினைத்தாங்கி எழிலாக வீற்றிருக்கும்
அறிவ னறம்விளங்கும் ஆலயமும் வேணதுண்டு
வீதி வரிசைகளும் விதவிதமாய் மெத்தைகளும்
இந்திர விமானத்துக் கிணையிதென் றெப்பிடலாம்
தேரும் திருநாளும் தீர்த்தக ருச்சவமும்
அஷ்டமங் கலமேந்தி அனுதினமும் தான்பணிவார்
செல்வச் செருக்குஞ் சீரான மங்களமும்
நாளும் நடந்துவரும் நலமுள்ள மாநகர்க்கு —

வைசயந்தராசன் மாண்பு

ராசாதி ராசன் நன்னயன் வைசயந்தன்
கற்பகம் போலுமவன் கருதினர்க்குத் தான்கொடுப்பான்
அன்ன நடையார்க்கு அனங்கனென்று ஒப்பிடலாம்
வெற்றிவேல் வேந்தன் விருதசீ லாசாரன்.

வைசயந்தன் குடும்பம்

அண்ணலுக்குத் தேவி அழகான சர்வஸ்ரீ
அரும்பெறற் கற்பியிவள் அயிராணிக் கொப்பிடலாம்.
இவர்கட்கு மைந்தர் இருவர் பிறந்தார்கள் ;
சஞ்சயந்த னென்றும் சயந்தனென்றும் பேருமிட்டார்.
மன்னனுந் தேவியும் மைந்தர்களும் தான்கூடி
ராச்சிய பாரம் நடத்துகின்ற நாள்தனிலே —

சஞ்சயந்தனின் மைந்தன் வைசயந்தன் தோற்றம்

சஞ்சயந்தற் கோர்மைந்தன் சசியைப்போ லுற்பவித்தான்
ராசன் மனமகிழ்ந்து நற்றருமந் தான்செய்து
வைசயந்த னென்றே வள்ளல்தன் பேர்கொடுத்தான் ;
நிதியறையைத் தான்திறந்து நெடியபொருள் தான்கொடுத்தான்.

---

47. இஞ்சிமஞ்சி தான்தாங்கி, எழில்பாக; 48. அருக னறம்விளங்கும், ஆலயமும், மேரு. 24, 27; 49. விதம் விதமாய்; 50. விமானத்தஃதிணையதென், மேரு. 18. 51. தீர்த்தக ருத்ஸவமும்; 52. அட்டமங், அஷ்டஸ்லோ கமேத்தி; 53. செல்வஞ் செருக்குஞ்; 54. மானகர்க்கு — இரண்டாவது ஏடு மாநகர்க்கு எனவரும் பிற இடங்களிலும் இவ்வாறே பாடங்கொண்டுள்ளது; 55. ராஜாதி ராஜன், வைஜயந்தன் — பின்னரும் இச்சொற்கள் இவ்வடிவுடன் ஓர் ஏட்டில் காணப்படும்; 56. கற்பகம் போலுமென்னக், மேரு. 43; 57. மேரு. 41; 58. விருதசீலா சாரனவன்; 60. கற்பிலிவள்; 62. ஸஞ்சயந்தன், ஜயந்தன் — இப்பெயர்கள் பின்வரும் இடங்களிலும் இவ்வேறுபாடு உண்டு; 63. தேவியரும்; 64. இராச்சிய பாரம்; 65. சஞ்சயந்தர்க்; 66. இராஜன்; 67. பேர்குடுத்தார்; 68. நிதியறை தான் திறந்து நெடிய பொருள்கொடுக்கும், மேரு. 56;

சுயம்புநாம தீர்த்தகர் வருகையை மன்னன் அறிதல்

அவ்வேளை தன்னில் அசோகம் எனும்வனத்தில்
சுவயம்புநாம தீர்த்தகர்க்குச் சுகுணகே வலியாகி
கேவல பூசைசெய்யக் கீர்த்தியுடன் இந்திரன்முதல்
நால்வகைத் தேவர்களும் நற்பரி ணமத்துடன்
வந்துஅவர் செய்யும் வைபோகம் தான்கண்டு
அவ்வன பாலகன் அரசனுக்கு வந்துசொன்னான்.

சுயம்புநாமரை வணங்க மன்னன் நகரத்தாருடன் செல்லுகை

சொன்ன வசனங்கேட்டுச் சுருக்கா யெழுந்திருந்து
ஆபரண மெல்லாம் அவனுக்கே தான்கொடுத்தார்.
ஏழடி சென்றுபணிந் தெல்லோர் மனங்குளிர
பறைகள் அறைவித்தான் பட்டணத்தார் தானறிய.
தரித்திரன் கண்டநவ தனமதுபோல் தான்மகிழ்ந்து
அந்நகரி லுள்ள அனைவோ ருடன்கூடி
அட்டமங் கலமேந்தி அன்புள்ள மைந்தருடன்
நடந்தார் சிறப்புச்செய்ய நவபுண்ணிய கிரமத்தால்.

மன்னன் சுயம்புநாமரை வணங்கித் தத்துவம் அறிதல்

படியேறித் தான்பார்த்தார் பரமனிட சன்னிதிமுன்
மானத்தம் பத்தையெய்தி மகிழ்வாய்முச் சுற்றுவந்து
மும்மதிலும் கோபுரமும் முக்கால் வலம்வந்து
பொன்னெயிலு ளையன் புனைதா ளடிதொழுது
துதிகள் பலவும்செய்து தோத்திரமும் தாங்கள்செய்து
பங்கிகள் ஏழும் பதார்த்தங்கள் ஒன்பதும்
அத்திகள் ஐந்தும் அனுபிரேட்டை பன்னிரண்டும்
தத்துவம் தானறிந்தார் தந்தையுடன் மைந்தர்களும்.

மன்னனும் மைந்தர்களும் போகத்தை வெறுத்தல்

தென்புடனே கேட்டுத் திரேகம் புளகிதமாய்
சேதனமா லாவி யசேதனமா லிவ்வுடம்பென்
றஞ்சி மனம்கலங்கி அதிபோகந் தான்வெறுத்து

---

70. சுயம்புநாத; 71. பூஜைசெய்ய, கீர்த்தியுடன் அந்தரமுதல்; 72. நற்பாசின நாமத்துடன்; 76. இந்த அடி மூன்றும் ஏட்டில் இல்லை; 77. சென்றுபணிந் தெல்லோரு; 78. மேரு. 57; 80. அந்நகரி லுள்ளவர்கள் அனைவோருந் தான்கூடி; 81. அஷ்டமங் கலமேந்த; 82. நவபுண்ணியக்; 83. தான்பார்த்தான்; ஸந்நதிமுன்; 84. மானஸ்தம் பத்தையெய்தி, மேரு. 60, 62; 85. மும்மதிளுங்; 86. பொன்னைக்குளையன், ளடிவணங்கி; 89. அனுபிரேக்ஷை; 91. தேகம் புளகிதமாய்; 92. சேதனமாலாவியே னசேதனமா;

ராச்சியமும் செல்வமும் நஞ்சென்றே தான்கருதி
காயக்கிலே சஞ்செய்யக் கருதினார் மூவோரும்.

மூவரும் முனிவர்களாதல்

ராச்சியமுஞ் செய்யவினி நம்மால் முடியாதென்று
சஞ்சயந்தன் மைந்தன் சற்குணனும் வைசயந்தன்
அவனரசு செய்யவென்று அன்புடனே மூவோரும்
காலை சுமக்குமந்தக் கனபாரந் தன்னையப்போ
கன்றின்மே லிட்டதுபோல் கனக முடிதரித்தார்;
மூவரும் தான்துறந்து முனிவர்களு மானார்கள்.

வைசயந்தர் அருகக்கடளாதல்

உக்கிர தபசுசெய்து யோகத்தில் தானிருந்து
பிரதிமாயோ கந்தாங்கி பெருந்தவமும் தாங்கள்செய்தார்.
அப்போது வைசயந்தர்க் கருங்காதி தானறவே
அனகநற் கேவலியாய் அருகக் கடவுளானார்.

வைசயந்தரைப் பூசிக்க வானவர் முதலியோர் வருகை

கேவல பூசைசெய்யக் கற்பாதி தேவர்வந்தார்;
அவரிலொரு தரணேந்திரன் அதிகவடி வாகவந்தான்.
வந்தவா னவரெல்லாம் வைசயந்த சுவாமிகளை
துதிகள் பலவும்செய்து துறவிகளை யும்பணிந்தார்,
அறிவர்சிறப் புச்செய்தார் அனைவோருந் தான்கூடி.

சயந்தமுனி தரணேந்திரனாதல்

சஞ்சயந் தர்க்கிளைய சயந்த முனிகளப்போ
தரணேந் திரனைப்போலத் தானாக வேணுமென்று
மனதில் நிதானம் செய்தார் மாதவத்துக் குறைவாய்
பந்தமதில் கட்டி பவணத்தில் தான்பிறந்தார்
தரணேந் திரனென்று தானானா ரப்போது.

---

94. இராச்சியமும், நஞ்சென்று; 96. இராச்சியமும், முடியாது; 99–100. மேரு. 121; 101. முனிவர்க ளானார்கள்; 103. பிரதிமாயோ கமும்செய்து, தாங்கள்செய்து, 105. அளகார், அழகார், அனகார்; 106. பூஜைசெய்யக்; 107. அதிகவடி வாகவந்தார்; மேரு. 132; 108. ஸ்வாமிகளை; 109. துறவிகளை யும்பணிந்து; 110, அறிவற்சிறப்புச், அனைவோருடன்கூடி; 115. மேரு. 140;

சஞ்சயந்தர்க்குற்ற பழியெடுத்துரைக்கத் தொடங்குதல்

தனியே யொருவரானுர் தாபதராம் சஞ்சயந்தர்
தாமே யொருவராகத் தவங்கள் நடத்தையிலே
மாமுனிவர்க் குற்றபழி வகைவகையாச் சொல்லுகிறேன்.

முதலாவது
வைசயந்தர் முத்திச் சருக்கம் முற்றும்.

இரண்டாவது
சஞ்சயந்தர் முத்திச் சருக்கம்

சஞ்சயந்தர் பெருந்தவம்

மனோகர புரமென்னும் மாநகரம் தன்னருகில்
பீமாரண் ணியமென்னும் பேரான பூங்காவில்
பிரதிமாயோ கந்தாங்கிப் பெருந்தவந் தான்செய்தார்.

தவமகிமை

மாதவன் நற்றவத்தால் மாவனந் தன்னிலுள்ள
வேங்கையும் மாவுங்கூடி வேகாந்த மாய்த்திரியும்
மான்கன்றும் புலிக்கன்றும் மாறி முலையையுண்ணும்
நாகமும் கீரியும் நயந்து விளையாடும்
பூனையெலி யுங்கூடிப் புரண்டு விளையாடும்
இவ்வனத்தி லுள்ளமிருகம் வைரங்கள் தானீங்கும்
மாதவன் நற்றவத்தால் மரியாதை வேணதுண்டு.

வித்துதந்தன் விமானம் செல்லாமல் பூமியில் இறங்குதல்

உக்க தவமுனிவர் உத்தம சய்யமதில்
சுக்கில லேசியையுடன் சுத்தபரி ணமத்தில்
நிற்கும் நிலையினிலே நீடிய தன்வயிரி
வித்துதந்த னென்னும் விச்சா தரனொருவன்

---

116. தனியே யொருவனை தாபதனும்; 117. தானேயொருவராகி, தானொருவராகி, நடத்தயிலே; 118. வகைவகையாய்ச் சொல்லலுற்றேன்; 119. மேரு. 146; 120. பேருன பூங்காவில்; 121. பேருன பூங்காவில்; 121. பிரதிமாயோ கமுந்தாங்கி; 122–127. மேரு. 142–143; 124. புலியின்கன்றும் மாறியே; 127. வைரங்கள் தாநீங்கி; 129. உத்தத் தவமுனிவர், சைய்யமதில், ஸமயத்தில்; 130. சுக்கில வசியையுடன்; 131. நிலைதனிலே, தன்வைரி;

தன்மனைவி சாமையுடன் தானோர் விமானமேறி
வான வழியாக வருமந்தத் தானத்தின்கீழ்
பீமாரண் ணியவனத்துப் பெருந்தவ மாமுனிவர்
மேலே விமானம் மிகவாய் நடவாமல்
அம்முனியைக் கண்டுமவன் அதிக சினம்சென்று
பாரிலிழிந் தானையோ பண்டு வயிரமதால்.

சினம்கொண்ட வித்துதந்தன் சஞ்சயந்தரைத் தன் விமானத்தில் ஏற்றிச்சென்று ஐந்து ஆறு ஒன்று கூடு மிடத்தில் தள்ளுதல்

முனியை வதைசெய்ய முனைந்தா னந்தவயிரி
வீரனைத் தானெடுத்து விமானமதி லேற்றிக்கொண்டு
வந்தான் பரதத்து வெள்ளி மலையருகில்
குமுதா அரிசுவர்ண கயவதி சண்டவேகை
ஐந்தாறும் கூடுமொன்றாய் அதிகத் தடத்தின்மேலே
விமானமது செல்லாது வீரனைத் தள்ளிவிட்டான்.
அவருக்கு அந்தத்தடம் அரையளவு தான்வரவே
முன்செய் வினையாலவன் முனியை யுபதரித்தான்;
முன்செய் வினையின்மேல் முனியும் முறுகலுற்றார்.

வித்தியாதரரையும் வித்துதந்தன் அழைத்துவரல்

வித்துதந்தன் வினையால் வீரன்மேல் கோபமுற்று
விஞ்சைய ருலகுசென்று விச்சாதரர்க்குச் சொல்வான் :
அய்ய னரக்கனென்றும் அதிகபசி காரனென்றும்
வந்தான் மலையருகில் வதைசெய்ய வேணுமென்று
இன்றுரா நம்மையெல்லாம் இருந்தா லவன்பொசிப்பான்
பெரிய வயிறனிவன் பிணம்தின்னும் பேரசுரன்
என்றான் கொடியபாவி; இவன்சொல்லை நம்பியந்த
விச்சா தரர்பயந்து வாளும் தடியெடுத்து
அவனுடன் கூடிவந்தார் அறிவில்லா விச்சாதரர்.

விச்சாதரர் செய்த கொடுமையும் சஞ்சயந்தர் அருகக் கடவுளாகி வானகம் செல்லுகையும்

வந்துமுனி யைப்பார்த்து மறிவனென் றஞ்சாமல்
அய்யோ வதைத்தவதை அளவிட்டுச் சொல்லப்போமோ!

---

134. வானம் வழியாக, ஸ்தானத்தின்கீழ்; 135. பெருந்தவர் மாமுனிவர்; 138. பாரிலிழிந் தானைய்யே, வைரமதால்; 139. னந்த வைரி; 141. மலையின்கீழே, மலைக்குங்கீழே; 142. மேரு. 150; 143. ஐந்தாறும் ஒன்றாய்க்கூடி அதிக தடத்தின்மேல்; 144. செல்லா தென்று வீரனைத்; 146. முன்செய்த வினையாலவன்; 147. முறுக லுற்றான்; மேரு. 151; 149. விச்சாதரர்க்குச் சொன்னான்; 150. அய்யனை அரக்கனென்றும், மேரு. 156; 151. வந்தர மலையருகில்; 152. இன்றிரா, மேரு. 157; 153. பெரிய வயிறன்மாட்டு, பிணம் தின்னும் பேர்தூரன்; 158. ஐயோ;

சஞ்சயந்த மாமுனிவர் சலியாமல் தன்வினையைச்
சுக்கில தியானவாளால் தூரியரும் சண்டைசெய்தார்.
அப்போது காதிகர்மம் அவரைவிட்டுத் தானகல
அருகக் கடவுளாகி அவர்சென்ருர் வானகத்தே.

சஞ்சயந்தருக்குத் தேவர் முதலியோர் வந்து சிறப்புச் செய்தல்

விச்சா தரர்பயந்து வெறுப்புடன் தானிருக்க
நால்வகைத் தேவரும் நாதரிடம் சென்று
கேவல பூசைசெய்ய கெந்தகுடி யமைத்து
விதியின் படியேயவர் வேணசிறப் புச்செய்தார்.

தரணேந்திரனுன சயந்த முனிகளின் சினம்

சயந்த முனிகளப்போ தரணே ந்திர னுகியவர்
விச்சா தரர்களந்த வீரனுக்குச் செய்தபழி
கண்டுதன் னவதியால் கைவல்லியர் தன்தமையன்
எண்ணி மனங்கலங்கி இருந்தவிச் சாதரரை
நாகபா சத்தில்கட்டி நடுக்கடலி விடுவனென்ருன்.

விச்சாதரர் முறையீடும் தரணேந்திரனின் எதிருரையும்

விச்சா தரர்களெல்லாம் விநயநமஸ் காரம்செய்து
உமதுகோ பத்தைநீக்கி உளம்பொறுத்துக் கேளுமய்யா!
அபராதி வித்துதந்தன் அவனுலே நாங்கள்வந்தோம்
அய்யனே அசுரனென்ருன் அனைவர்க்கும் மரணம்
[சொன்னுன்
அதினுலே நாங்கள் வந்தோம் அனபராதிக ளய்யா !
தம்மைவிட வேண்டுமென்ருர். தரணே ந்திரனு மப்போ
விச்சா தரரைவிட்டு வித்துதந் தனைக்கட்டி
கடலில் விடுவேனென்று கருதினுன் வேணபடி.

ஆதித்தியாபனின் அறிவுரை

ஆதித்தி யாபனென்னும் அதினிலொரு தேவன்கண்டு
தரணே ந்திர னுக்குரைப்பான் தண்மையுடன் நற்சரிதம் :

---

160. சுக்லத் தியானவாளால், மேரு. 161, 168; 161. மேரு. 170; 163. வெருப்புடன் தானிருக்க; 164. மேரு. 171; 165. பூஜை செய்ய, கேந்தகூடி; 166. வேண சிறப்புத் தான்செய்தார்; 169. கைவல்ய தன்தமையன், மேரு. 179; 170. 179; 171. மேரு. 180; 172. வினயநமஸ்காரம் செய்து, விநயநமஸ் காரம்செய்து; 173. உளம்பொருந்தக் கேளும்மைய்யா; 175. அய்ய னசுர னென்ருன் அவனுக்கு, மேரு. 182; 177. நம்மைவிட வேண்டு மென்ருர்; 178–179. மேரு. 184; 180. ஆதித்தாபனென்று; மேரு. 185.

இவனுனக்கு ஈடல்ல ஏருமாட்டுக் கொப்பிடலாம்
ஆதிகா லத்திலாதி அந்தணன் சொல்படிக்கு
நமியும் விநமியென்று நல்லவிச் சாதரர்க்கு
உங்கள் பெரியோர்கள் உகந்தளித்த பீடமதில்
உற்பவித்த மைந்தனிவன் நீயொழிக்க லாகாது
சமுசார சீவன்களில் சத்துருவு மித்துருவுண்டு
உலகமெல்லாம் பெந்துக்கள் உனக்கு மெனக்குமுண்டு
சஞ்சயந்தர் போலுனக்குச் சம்மந்தம் வேணதுண்டு
இன்னுமனே கஞ்சொல்ல இவர்வசனம் தான்கேளான்.

தன்னுரை கேளாத தரணேந்திரனுக்கு முற்பவ நிகழ்ச்சிகளை ஆதித்தியாபன் சொல்லத் தொடங்குதல்

ஆதித்தியா பனுமப்போ அவதியால் தான்தெரிந்து
பின்னுந்தர ணேந்திரனுக்குப் பிரியமாய்ச் சொல்லலுற்றார்.

சஞ்சயந்தன் முதலியோர் முற்பவம் கூறத் தரணேந்திரன் கேட்டல்

உன்முன் பிறந்தமுனி உத்தம மாதவர்க்கு
பண்டு பெரும்வயிரி பகையாளிக் குற்றனிவன்
ஆனு லுனக்குகதை அறிவாகச் சொல்லுகிறேன்;
நான்கு கஷாமற நலமுடனே கேளுமென்றார்.
நாதனும் நீயும்நானும் நம்பிவித்து தந்தனும்
பிறந்த பவங்களைப் பிரிவாகச் சொல்லலுற்றார்;
நாகேந் திரனுமப்போ நன்மையுடன் கேட்கலுற்றான்.

இரண்டாவது

சஞ்சயந்தர் முத்திச் சருக்கம் முற்றும்.

மூன்றாவது

பத்திரமித்திரன் அறங்கேள்விச் சருக்கம்

சீயமகாபுரச் சிறப்பு

நாவலந் தீவுதனில் நடுவில் மகமேரு
மேருவுக்குத் தெற்கான மிகுந்த பரதந்தன்னில்

---

182. மேரு. 186; 183. சொல்படிக்கி; 184-185. மேரு. 187, 205; 185. பெரியோர் உகந்தளித்த பீடமத்தில்; 186. உற்பவித்த ஏந்தலிவன்; 187. ஸம்ஸார ஜீவன்களில் சத்துருமித் துருவுண்டு, மேரு. 210; 188 பந்துக்கள்; 189. சம்பந்தம்; 190. தான்கொள்ளான்; 191. அவதியால் தானறிந்து; 192. சொல்லலுற்றான்; 194. பெரும் வைரி. மேரு. 218; 195. ஆனு லுனக்கதை, சொல்லலுற்றேன்; 197. மேரு. 223; 199. கேழ்க்கலுற்றான்; கேழ்க்கலுற்றார்; 200. தீவுதன்னில், மகம்மேரு, மேரு. 224;

அருகனறம் விளங்கும் அருந்தரும கண்டமதில்
சீயமகா புரமென்னும் சிறப்புள்ள மாநகரம்
செல்வ நகரழகு செப்பவும் வேணதுண்டு.

சிங்கசேண மகாராசனும் அரசி இராமதத்தையும்

சீருள நகர்க்குச் சிங்கசேண மகராஜன்
வெற்றியுடைய வாளான் வேந்தரை வென்றசிங்கன்
ஒப்புமை யின்றிநின்ருன் உதவிக்குக் கற்பகனும்
செவ்விதழ் மாதர்தொழும் சேனைக்கு மன்மதனும்.
இவனுக் கரசியாயள் இனியான கற்பியவள்
பேரு மிராமதத்தை பெருந்தேவிப் பட்டம் பெற்ருள்.

அமைச்சன் சத்தியகோடன் உதவியுடன் சீயமாசேனன் அரசாளுதல்

ராசன் மனதுபடி நடக்கையுடை யோனமைச்சன்
சத்திய வேதங்களில் சகலகலை நிபுணன்
அங்கநூ லாகமங்கள் அறிந்திருப்பா ஞதலினல்
சத்திய கோடனென்னும் சிறப்புப்பேர் தான்பெறுவான்.
காரணப்பேர் சிரீபூதி கனகமணி மார்பனவன்,
தன்னுவுஞ் சூதுசொன்னல் தறித்திடவே கத்திரிக்கோல்
கட்டிருப்பான் பூணூலில் காவலனும் தானறிய.
தக்கவ னென்றரசு தாங்கிவரும் நாள்தனிலே —

பத்துமஷண்டத்தில் பத்திரமித்திரனின் வாழ்க்கை

பத்துமஷண்ட மென்னுமொரு பாங்கான மாநகரில்
அருகனெறி தவருன் அணுவிரதன் தனவைசியன்
சிரேஷ்டி சுதத்தனுக்கும் சீருள சுமித்திரைக்கும்
பத்திரமித் திரனென்னும் பாலன் பிறந்துவளர்ந்
துத்தம தத்துவமும் ஓதியுணர்ந் ததன்மேல்
ரத்தினமும் முத்துகளும் நித்தம் விலைமதிப்பான்.
தந்தை மகிழ்ந்துசுதன் தன்மை மிகவறிந்து
செந்தளிர்சூழ் மங்கையரைச் சேர்த்துவிவா கம்செய்தான்.

---

202. மேரு. 225 ; 204. செல்வ னகரழகு, செல்வ னகரமதும் சேப்பவும் ; 205. சிங்கஸேந மகாராஜன் ; 206-208. மேரு. 227; 206. வாளன் ; 208 சேவவித மாதர்தொழும். இவ்வடி 2ஆம் ஏட்டில் இல்லை. 209. இவனுக் கரசியாய் ; 211. இராஜன், நடத்தையுடை ; 214. தான்பெற்ருன், மேரு. 229 ; 215. ஸ்ரீ பூதி, கனக மணிமார்பன்; 218. மேரு. 229; 219. பத்மசண்ட; 220. அருகநெறி தவிராஞல் ; 221. சீரார் சுமுத்திரைக்கும் ; 222. பாலன் பிறந்தோங்கி : 223. உத்தம, ஓதியுணர்ந்ததின்மேல் ; 226. மேரு. 235 ;

பத்திரமித்திரன் கடல் வாணிகம் செய்து சீயபுரம் வந்து சேர்தல்

புண்ணிய வாளனிவன் பொருள்தேட வேணுமென்று
ரத்தினதீ பம்சென்று நவரத்தி னங்கள்கொண்டு
மரக்கல மேற்றிவந்தான் மாசீய மாநகரின்
கரையில் விழிந்துபுறம் கண்டு மனம்மகிழ்ந்தான்
வணிகரெதிர் வந்தழைத்த வைபோகம் தான்கண்டான்.

தன்னூர் சென்று மீளும்வரை இரத்தினச் செப்பைச் சத்தியகோடனிடம் தந்துவைக்க வருதல்

அந்நகரி லுள்ளவர்கள் அழகும் பெருமைகளும்
மன்னரசு தன்னிலையும் மாவணிகர் சொல்நிலையும்
தானறிந்து தன்சரக்கைத் தக்கவிடம் தேடிவைத்து
மற்ற மணியையெல்லாம் மாநகரி லுற்றவிடம்
வைத்துத்தன் சுற்றமெலாம் வரவழைத்துக் கொண்டுவர
வேண்டி மனம்கருதி வெற்றிநகர் முற்றும்பார்த்து,
ஆரையும் நம்பாமல் அரசனிட மந்திரியை
பரமனூல் ஓதுஞ்சத்தியன் பார்த்திப னுக்கமைச்சன்
சொன்ன மொழிதவறான் சுருதிசின வாகமியென்
றெண்ணி மனம்மகிழ்ந்து ஏற்றவிட மென்றறிந்து
மாமணியை ரத்தினச்செப்பில் மறைவாக வைத்துக்கொண்டு
ஏகியவர் முன்னின்று இனிதாய்த் தொழுமளவில் —

மந்திரியிடம் வணிகன் தன்குறிப்பு எடுத்துரைத்தல்

மந்திரியு மப்போது மாயாவினோதம் செய்தான்;
பத்திரமித் திரனுக்குப் பாகுடமும் தான்கொடுத்து,
ஏதலுவ லென்றுபூதி இன்பமாய்க் கேட்கையிலே—
பத்திர மித்திரனும் பணிந்தெழுந்து தான்சொல்வான்:
நான்வணிக னைய்யா ரத்தினவியா பாரியென்றும்
பத்துமஷண் டபுரம்போய்ப் பந்துவை யிட்டுவர
வேணுமென்று சொல்லி விநயநமஸ் காரம்செய்து,
வருந்தனிலும் ரத்னசெப்பை வைத்திருந்து தாருமென்றான்.

---

228. இரத்தினதீ பஞ்சென்று; 230. கரையி விழிந்துமவன், மனம்மகிழ்ந்து; 231. வந்தழைக்க, தான்கண்டார், மேரு 240; 232. மேரு. 241; 233. மாவணிகர் செல்வினையும்; 234. தக்கவிடம் தேடிவைத்தார்; 235. மேரு. 242; 239–240. மேரு. 244; 240. மொழி தவிரான், சுருதி ஜினவாகமியான்; 244. மந்திரியு மப்பொழுது; 245. பத்திர மித்திரர்க்கு, தான்குடுத்து. மேரு. 245; 246. கேழ்க்கையிலே; 248. நானோர் வணிகனையா; 249. பத்மசண் டம்புறம்போய், பெந்துவை யிட்டுவர 250. வினயநமல் காரஞ்செய்து;

மந்திரியின் மறுமொழி

வைப்பதுவும் மெய்யேநான் வாங்குவது நன்மையல்ல,
பிறர்பொருளைத் தொட்டால் பேராசை தானுமுண்டு.
அதனாலே பாவமென்றார்; ஆனாலும் நல்லவர்நீர்
ஆரு மறியாமல் அரும்பொருளைத் தாருமென்றார்.

மந்திரி சொற்படி இரத்தினச் செப்பை வைத்துச் சென்ற பத்திரமித்திரன், தன் ஊர் சென்று குடும்பத்தாருடன் மீண்டபின், அவனையடுத்து இரத்தினச் செப்பைக் கேட்டல்

அவன்கையில் ரத்தினசெப்பை அன்புடனே தான்கொடுத்து
நெய்தல் குறிஞ்சிபாலை நிலம்கடந்து தானேகி
பத்துமஷண்டம் சென்று பந்துவெல்லாம் தானழைத்து
வழிவருத்தந் தான்கடந்து வைந்துபூ மியும்மேகி
சீய புரத்துக்குச் சீருடனே தான்வந்து,
தன்சுற்றத் தாருக்குத் தகுந்தவிடம் தேடிவைத்து,
மந்திரியைக் காண மனமகிழ்ச்சி யாகச்சென்று
கண்டு களித்தவரைக் கைகூப்பித் தெண்டனிட்டான்.

வணிகனை அறியாதான்போல அமைச்சன் பேசுதல்

மோசஞ்செய்ய நினைந்தான் மூடன்சத் தியகோடன்
ஆருநீர் என்றுகேட்டான்; அன்றுவந் தவனென்றான்.
என்றவன்சொன் னதைக்கேட் டிவன்பித்த னேயென்றான்;
சபைக்கு நிசமாகச் சாதித்துப் போம்போமென்றான்.

மணிகளைத் தாரும் என்று கேட்ட செட்டியை அடித்து வெளியே தள்ள அமைச்சன் கட்டளையிடல்

சிரேட்டியரு மப்போது செம்மணிகள் வைத்தவனான்
ஏதோ மறந்தீர்கள் இதையுணர்ந்து தாருமென்றான்.
சொன்னதெப் படியென்றான் சொன்னதைச் சொல்லுவேன் [நான்
அதட்டி மிரட்டி கோடன் அடித்தவனைத் தள்ளவென்றான்.

---

252. வைப்பது மெய்யானால், நன்மையல்லா ; 254. அதினாலே பாவமென்றான் ; 256. தான்குடுத்து ; 257. மேரு. 248 ; 258. பத்மசண் டமுஞ்சென்று, பற்மசண் டமும்சென்று ; 259. வந்துபூமியுமேகி, வந்துபூ மியுமெய்தி ; 260. தானும்வந்து ; 263. தெண்டனிட்டார் ; 265. ஆருநீம், ஆருநீ, மேரு. 253; 267. நிஜமாகச் சாதித்துப் போமென்றான் ; 268. சிரேஷ்டியரு மப்பொழுது, செட்டியாரு மப்போது ; 269. மேரு. 254 ; 270. சொன்னதைச் சொல்லுமென்றான், சொல்லவென்றான் ; 271. அடித்து மிரட்டிகோடன், அதட்டிமேற்படிகேட்டான் ; பிடித்தவனைத் தள்ளுமென்றான் ;

'உன் சூதை வெளிப்படுத்துவேன்' என்று சொல்லி வணிகன் வெளியேறுதல்

வணிகர் மனம்கலங்கி வஞ்சித்தான் என்றழுது
மந்திரியை நோக்கியவர் மரியாதை விட்டுச்சொன்னார் :
'அரும்பொருளை வாங்கிக்கொள்ள அன்றுதத் துவஞ்சொன்னீர்;
இப்போநீ ரிலையென்று என்னையும் பித்தனென்றாய் !
காட்டுவேன் உன்சூதைக் கண்ணாடி யைப்போல'
என்றுசொல்லித் தான்தெருவில் ஏகினார் செட்டியாரும்.

பத்திரமித்திரனின் முறையீடு

பட்டணத்தி லுள்ளறிவர் பலபுருடர் தன்னுடனும்
ராசன் சபையிலுமே நடுங்காமல் சொல்லலுற்றான் :
மந்திரிசத் தியகோடன் மகராசன் என்றவனை
வேதவே தியனென்று வெகுவிதமாய் நானறிந்து
வைத்தேன் ரத்தினத்தை வாங்கியவன் இல்லையென்றான்
பித்தனென் றென்னைத்தள்ளிப் பெரும்பொருளைத் தான் [கொண்டான்;
வஞ்சித்தான் என்னையய்யா, வையகத்து மன்னவரே !
சாதியால் வேதியென்று சகலதத் துவம்சொல்லும்
மந்திரி கள்ளனென்று மகராச னுக்குச்சொன்னான்.

மன்னன் மந்திரியை வினவ, அவன் மறுத்தல்

மன்னவன் சொல்கேட்டு மந்திரியைத் தானழைத்து
வணிகனெதிர் கோடனிடம் வரலாறு தான்கேட்க—
இவ்வணிக னோர்பித்தன், இவனைநான் கண்டதில்லை;
மணிச்செப்பு வைத்தேனென்றான்; மானவன்நீ என்று சொன் [னான்;
நாதன்நூல் நாளுமோதும் நானே திருடனானால்
பாரிலுள்ள வரெல்லாம் பெருந்திருட ராவாரென்று

---

272. வணிகன் மனம்கலங்கி ; 273. விட்டுச்சொன்னான் ; 274-275. மேரு.260 ; 275. இப்போநீ ரில்லையென்று, என்னைநீ, மத்தனென்றாய் ; 277. செட்டியரும் ; 278. பட்டணத்தி லுள்ளவர்க்குப் பலருடனும் சொல்லலுற்றான், பட்டணத்தி லுள்ளாரியர் ; 279. இராஜன் ; 280. மகராஜன், மேரு. 262 ; 281. வெகுவிதமாய்த் தானறிந்து ; 282. வைத்தேனென் ரத்தினத்தை, இல்லையென்று; 283. பெரும்பொருளைத் தான்கொண்டு ; 284. மன்னவனே; 285. சாதியில்வே தியனென்று; 286. மகராஜனுக்குச் சொன்னான் ; 288. வணிக ரெதிர்கோடல் வரலாறைத் தான்கேழ்க்க ; 289. மேரு.265 ; 291. நாளும் போதம். மேரு. 266 ;

மந்திரி சபதம்செய்ய, மகராசன் தான்கேட்டு,
உற்ற வசனமிது பித்தனவ னென்றுவிட்டான்.

மந்திரியின் கொடுமைக்கு அஞ்சிய வணிகன் அதிகாலையில் வந்து அரண்மனையருகில் முறையிடுதல்

மந்திரியும் சிரேட்டியின்மேல் மாநகரில் தன்னிலுள்ள
நாயை யுசுக்கச்சொன்னன்; நாகத்தை யோட்டச்சொன்னன்.
அவரும் அதற்கஞ்சி அதிகாலை தான்வந்து,
அரசன் மனைக்கருகில் அசோகமரம் தானேறி,
உள்ளபடி நீதியோதி உறப்பாகக் கூச்சலிட்டு
வைத்த படியேயவர் வகைவகையாய்த் தான் சொல்ல—

அரசி இராமதத்தை பத்திரமித்திரனை அழைப்பித்து உண்மையுணர்தல்

நாள்தோறும் கேட்டுமன்னன் நாயகி ராமதத்தை
மத்தனிவ னல்லவென்று மகராசி தான்கருதி
மத்தனிவ னென்ருல் மாறுபாடாச் சொல்லுவான்;
ஆறுதிங்க ளாகவிவன் அலையுருன் என்றெண்ணி,
குற்றன்சத் தியகோடன் கூர்மை யறியவென்று
பத்திர மித்திரனைப் பாரரசி தானழைக்க,
குற்றமில் லவனேடிக் கும்பிட்டான் உத்தமியை;
உத்தமியும் தானவனை உள்ளபடி சொல்லவென்ருள்.
தத்துவநூ லதுபோலத் தானுரைத்தான் கோடன்தூதை,

அரசி மேலும் முறையிடு என்று வணிகனை அனுப்பிவிட்டு அரசனிடம் தான் சூதை வெளிப்படுத்திக் காட்டுவதாக உரைத்தல்

இனியரசி தான்கேட்டு இன்னும்போய் முறையிடென்று
அவனை யனுப்பிவிட்டு, அரசனிடம் தானேகி,
கேட்டாள் அறிவுடனே, கேடில்லா மித்திரன்மொழி :
ஏதோ அறிவுமக்கு, இவ்வரசு செய்தமொழி;
பத்திர மித்திரனைப் பயித்தியக் காரனென்றீர்;
மந்திரி செய்தபழி மனதறியா மல்விட்டீர்.
நானுமிச் சூதுமக்கு நலமாகக் காட்டுகிறேன்.

---

293. மகராஜன் ; 294. உத்த வசனமிது, மத்தனிவ ; 295. மந்திரியும் சிரேஷ்டியின்மேல், மந்திரியும் செட்டிமேல் ; 296. நாயை யுசுப்பச் சொன்னன், மேரு. 269 ; 297. அவனும் அதற்கஞ்சி ; 299. ஒறப்பாகக் கூச்சலிட்டு ; 300. வைத்த படியேயவன் ; 302. பித்தனிவ னல்லவென்று ; 303. பித்தனிவனென்ருல், சொல்வான் ; மேரு. 279 ; 306. தானழைத்து; 310. இனியரசு தான்கேட்க, இன்னம்போய் முறையிடென்ருள்; 313. இவ்வரசு செய்தபழி; 314. பயித்தியக்காரனென்று ; 315. மனதிலறியாமல் விட்டீர் ;

அரசி அரசன் உத்தரவு பெற்று அமைச்சனுடன் சூதாடுதல்

வித்தகனோ டாடச்சூதுக் குத்தரவு தாருமென்றாள்;
அரசனு மப்படியே ஆடவென்று உத்தரித்தார்.
மந்திரியைத் தானழைத்து, மர்மங்கள் சொல்லாமல்,
சூதாட வேண்டுமென்று சூதில்சப தஞ்செய்தாள்.
முன்முறை தான்கெலித்தால் மோதிரமும் பூணூலும்
தந்திட வேண்டுமென்று தலையாட்டம் போடயிலே,
தானே கெலித்தரசி தக்கவன் மார்பினூலும்
மோதிரமும் தான்கொண்டு முறைமுறையே தான்கெலித்தாள்.

சூதாட்டத்தில் கோடன் தோற்று மூர்ச்சிக்க, அரசி தான் கைப்பற்றிய அடையாளத்தைத் தன் தோழி நிபுணமதி யிடம் தந்து, மணிச் செப்புப் பெற்றுவர ஏவுதல்

மூர்ச்சித்தான் கோடனப்போ ; முறுவலுடன் தானெழுந்து,
தன்னந்த ரங்கமுறும் தாதியாம் நிபுணமதி
அவளிடம் சென்றிந்த அடையாளம் தான்கொடுத்து,
சூதுசொல்லித் தந்துவரச் சொன்னாள் அவளுடனே.

நிபுணமதி சென்று மணிச் செப்புப் பெற்று வருதல்

அவளும்தான் ஏகியந்த அமைச்சன் பாண்டாகாரிக்கு
அரசியாள் சொன்னசூதில் அநேகவிதம் தான்கலந்து
கொண்டுமந் திரிபாண்டக் கொடியனுடன் ஒத்துச்சொல்ல,
அதையு மவன்கேளான் அடையாளம் தான்கொடுத்தாள்.
தக்கதென் றெண்ணியவன் தந்துவிட்டான் ரத்தினசெப்பை;
வாங்கித் திரும்பினாள் வையகமும் கொண்டாட.

செப்பைக் கொண்டுவந்த தோழியை அரசி புகழ்ந்து, பின் அதனை அவள் அரசனுக்குக் காட்ட, அவன் மகிழ்தல்

உப்பரிகை மீதிருந்து உத்தமியுந் தான்பார்த்து,
திரேகம் புளகித்துத் தென்புடனே தான்துதிப்பாள்;
வாற குறிப்பிலுந்தன் வதனந்தா மரையொக்கும்
என்றுதா னெண்ணியிடும் இராமதத்தை யின்கையில்

---

318. உத்தரித்தான், இந்த அடி 2 ஆம் ஏட்டில் இல்லை. மேரு. 280; 322. தந்திட வேணுமென்று தலையாயம்; 323. தக்கவன்மார் பூணூலும்; 324. மேரு. 283; 326. மேரு. 284; 329. பண்டகாரிக்கு; 331. கொண்டுமந் திரிபாண்ட காரியுடன்; 335. உத்தமியும் பார்த்திருந்தாள்; 336. தேகம் புளகிதமாய்த்; 337. வாற குறிப்பி லுந்தான் வதனந்தா மரையோங்கும், மேரு. 292; 338. என் றெண்ணித் தான்வந்து;

தந்தாள் ரத்தினசெப்பைத் தான்வாங்கிக் கொண்டவளை,
என்தாயே என்றணைந்து இறந்தபொருள் கொண்டுவந்தாய்
நிபுணமதி யென்றபெயர் நினக்கென்றே தான்மகிழ்ந்து,
அரசனிடம் சென்று அரும்பொருளைக் காட்டலுமே —
சீயமா சேனனப்போ சிந்தை மகிழ்ந்தவளை,
'சிந்தா மணியேநீ இச்செயலை யறிந்தாயென்று,
அரசுக்குக் குற்றம் அமைச்சனால் வந்துதய்யோ!
ஏதோ பழியோவிது இனியாவ தென்ன' வென்று—

வணிகன் பத்திரமித்திரனின் உள்ளத்தை அரசன் சோதித்தறிந்து அவனுக்குச் சிறப்புச் செய்தல்

ஓதும் வணிகனுண்மை உளமறிய வேண்டுமென்று
செப்பின் மணியுடனே சிலமணிகள் தான்கலந்து,
வணிகனைத் தானழைக்க, வையகத்து மன்னவரை
வணிகன் பத்திரமித்திரன் வணங்கித் தொழுதுநிற்க—
'இச்செப்பிலுன் செப்பேது, இம்மணியி லும்முதேது?'
என்று னரசனப்போ இவன்வணங்கித் தான்பார்த்து,
மணிச்செப்பு தன்னதென்றான் மாமணியீ தல்லவென்றான்;
இம்மணியில் என்மணியும் இசைந்து கிடக்குதென்றான்.
தன்மணியைத் தான்பொறுக்கித் தன்கையில் வைத்துக்கொண்டு
அம்மணியை நீக்கிவிட்டான் அப்பிர மத்தனைப்போல்,
நீதிகள் ஓதிச்சொன்னான், நின்று அரசன்முன்னே
பிறர்பொருளில் இச்சை கொண்டால் பெருநரகந் தானுமுண்டு
என்றுசில நீதிகளை இனிதா யுரைக்கலுமே—
அரசன் மனமகிழ்ந்து அமைச்ச னுனக்குச்செய்த
பழிகுற்றம் தீரநீ பலமணியும் கைக்கொ ளென்றான்.
மற்றப் பொருளைக்கொள்ள மானவன்நா னல்லவென்று
உற்ற சினசரிதம் உரைத்தான் மன்னவனுக்கு.
அரசன் களிகூர்ந்து அவனைவெகு சத்தியனென்று
சிரேட்டி பதம்கொடுத்தான்; செல்வமும் தான்கொடுத்தான்.

மந்திரி சத்திய கோடனை மன்னன் தண்டித்தல்

மந்திரிசத் தியகோடன் மாயன்வஞ் சகனென்று
அவனுக்குத் தெண்டம்செய்ய அறிவோரைக் கேட்கலுமே,

---

340. யெறந்தபொருள், மேரு. 295; 344. இச்செயலை நீயறிந்தாய்; மேரு. 296; 345. வந்துதப்போ; 346. ஏதோ பழியோயிது; 347. உளமறிய வேணுமென்று; 349. வணிகனைத் தானழைத்து, வணிகனைத் தானழைத்தார் வையகத்து மன்னவரும்; 353. தன்னுதென்றான்; 354. இசைந்து கெடக்குதென்றான்; 355-356. மேரு. 305; 358. பிறர்பொருளை யிச்சை; 361 .மேரு. 306; 365. சிரேஷ்டி பதங்குடுத்தார், செல்வமுந் தான்குடுத்தார்; 366. மாயவஞ்சகன்; 367. அறிவோரைக் கேழ்க்கலுமே. கேட்கலுற்றான்;

அறிவர் நூலின்படியே அவரறிந்து சொன்னார்கள்:
சவட்டையடி முப்பது, சாணன்முக் கிண்ணமும்,
உள்ளுக்கோர் கிண்ணம் உடல்மத்த கத்தில்ரண்டு
வார்ப்பதென்று சொன்னார்கள் வையகத்து நல்லாரியர்.
அப்படியே செய்கவென்று அரசனும் உத்தரித்தான்.
தர்மில னென்னுமொரு தயையுள்ள அந்தணனும்
அவனுக்கு மந்திரிபட்டம் அன்பாகத் தான்கொடுத்து
ராச்சிய பாரம் நடத்திவரு மப்போது —

தண்டனை பெற்ற சிரீபூதி செத்து அரவாமாய்ப் பிறத்தல்

மாயன் சிரீபூதியை மல்லர்கள் சுற்றிக்கொண்டார்.
'சீதேவி தன்முறையால் சீரடைந்தீ ரித்தனை நாள்'
என்றுமூ தேவிசொல்லி, என்முறை என்றணைந்தாள்.
அப்போது கோடன் அருஞ்சிறையால் தானழுந்தி,
ஆயிரம் செம்புலியில் அகப்பட்ட காளைபோல்
நின்றவனை மல்லர்கையால் நெட்டி இடியிடித்தார்;
மூன்றுகிண்ணம் சாணனும் மூடனுக்குத் தான்பொழிந்தார்.
அரியதுன் பமும்பட்டு அரசன்மேல் வைரம்வைத்து
ஆர்த்ததியா னத்தில் செத்து அரசன்பாண்டா காரத்தில்
அகந்தன னென்னுமொரு அரவமாய்த் தான்பிறந்தான்.

வரதர்மமுனிவரிடம் பத்திரமித்திரன் அறங்கேட்டு நகரம் வந்து இனிது வாழ்தல்

அரசனுக்குச் செரேஷ்டியான அன்பன் பத்திரமித்திரன்,
அசனு டவியென்னும் அழகான மாவனத்தில்
விமலகாந் தாரமென்னும் வீரிய மாமலையில்
வரதர்ம னென்னுந்தவ வாமனிடஞ் சென்று,
அஞ்சலி செய்து செரேஷ்டி அங்காக மங்கள்கேட்டு,
பாத்திரதான விரதம் பரிவாகத் தான் கொண்டு
நற்பரி நாமத்துடன் நகரந்தான் வந்திருந்தான்.

மூன்ருவது
பத்திரமித்திரன் அறங்கேள்விச் சருக்கம் முற்றும்.

369-370. மேரு. 317; 369. சாணகமுக் கிண்ணமும்; 370. கிண்ணமும் உடல்மத்தகத்தில் ரண்டுகிண்ணம்; 371. வைய்யகத்து; 372. அரசனும் உத்தரித்தார்; 373. தயவுள்ள, மேரு. 341; 374. மந்திரி பதம்; அன்பாகத் தான்கொடுத்தார்; 376. ஶ்ரீபூதியை; 379. அப்போது சத்தியகோடன் அருஞ்சிறையில்; 380. மேரு. 319: 382. சாணமும்; 384-385. மேரு, 330-332; 387. அரசனு டவியென்னும்; மேரு. 342 - 389, 390. மேரு. 347; 391. விருதம்; 392, நற்பரிணுமத்துடன்; நாலாவது 'சொர்க்கம் புக்க சருக்கம்' என முதலேட்டில் காணப்படுகிறது. இரண்டாவது ஏட்டில் 'பூரண சந்திரன் சருக்கம்' என்று உள்ளது. இச்சருக்கப் பொருளுக்கு ஏற்ப அமைந்தது இரண்டாம் ஏட்டில் காணும் தலைப்பே. ஆதலின் அதுவே எடுத்துக்கொள்ளப்பட்டது.

நாலாவது

பூரணசந்திரன் சருக்கம்

பத்திரமித்திரன் தானம் செய்ததைப் பொருத தாய், புலி யாய்ப் பிறந்து, மகனையே மாய்த்தல்

மத்தொருநாள் மாமுனிவர் மாவிரதந் தப்பாமல்
உத்தமதா னம்செய்தார் உள்ள பொருள்களெல்லாம்.
பத்திர மித்திரன்தாய் பாவிசுமித் திரையென்பாள்,
தானவிர யம்செய்யும் தன்மகன்மேல் கோபம்வைத்து,
அரும்பொருளைப் போக்கினனென் றஞ்சி மனம்கலங்கி
ஆர்த்தத்தில் செத்துமவள் அசனுடவி வனத்தில்
புலியாய்ப் பிறந்தாளன்னை, பிள்ளை வைரத்தால்.
மற்றொருநாள் பத்திரமித்திரன் மாவனம் தன்னில்செல்ல,
தாய்ப்புலியும் பார்த்ததய்யோ, தன்மகனைப் பாய்ந்துதப்போ.

மாய்ந்த பத்திரமித்திரன் இராமதத்தை புதல்வனுதல்

மரித்தவன் இராமதத்தை மாதாவென் றெண்ணமதால்
சிம்மசந் திரனென்று செல்விவயிற் றுற்பவித்தான்.

இராமதத்தை பெற்ற மற்றொரு மைந்தன் பூரணசந்திரன்

மற்றொரு மைந்தனை மாதேவி தான்பயந்தாள்
பூரணசந் திரனென்று புதுமையாய்ப் பேருமிட்டார்.
ஐந்து வயதிலவர் அருங்கலையும் தானுணர்ந்து
இப்படி யாகமைந்தர் இருந்துவரும் நாள்தனிலே —

மைந்தருடன் பண்டகாரத்திற்குச் சென்ற சிம்மசேனனை வயிரியாயிருந்த அகந்தன சர்ப்பம் கடிக்க, அவன் மாய்தல்

ராசாதி ராசன் நற்சீலன் சிம்மசேனன்
தன்பண்டா காரத்தொருநாள் தான்சென்றார் மைந்தருடன்.
அதிவைரி யானவந்த அகந்தன சர்ப்பமது

---

393. மைத்தொரு நாள்; 395. பாவி சுமித்திரையாம்; 397. றெண்ணி மனம்கலங்கி; 398. ஆர்த்தகியானத்தில்செத்து அசனுடவி, மேரு. 361; 399. பிலியாய்ப், வைரத்தினல்; 400. மைத்தொருநாள்; 401. தாய்ப்பிலி, மேரு. 365; 402. ராமதத்தை, மேரு. 368; 403. மேரு. 370; 404. மைத்தொரு; தான்பெற்றுள்: 405. மேரு. 373; 406. ஐந்து வயதும்வர அருங்கலையும். இந்த அடி 2ஆம் ஏட்டில் இல்லை; 408. இராஜாதிராஜன், சிம்மஸேனன்; 409. தன்பண்டா காரத்திற்குத்; 410. அதிவயிரி யாயிருந்த, சர்ப்பமிது;

அரசனைக் கண்டுதைய்யோ அதிக சினம்சென்று
நரபதியைத் தான்கடிக்க, நடுங்கியவர் தான்விழுந்தார்.

கெருடதண்டன் ஓமத்தில் அகந்தனன் அழிந்து கவரி மானாய்ப் பிறக்க, சிம்மசேனன் அசனிகோட மென்னும் யானையாதல்

மைந்தருடன் ராமதத்தை மனங்கலங்கித் தானழவே,
அந்நகரில் கெருடதெண்டன் அதிக விடநிபுணன்
அந்தக் குடுமிவந்து அரசனைத் தொட்டபாம்பைக்
கடுக வரவழைத்துக் கட்டுவேன் காருடத்தால்
பாருங்கோ ளென்று பாம்பையெல்லாம் தானழைத்து
ஓமம் வளர்த்தியதில் உள்ளே நுழையுமென்றான்.
'குற்றமில்லா தார்நுழைந்தால் குளிர்ச்சியாய்ப் போய்விடலாம்;
குற்ற முடையாரிதில் குன்றிநெருப் பாவா'ரென்று
இதைச்சொல்லித் தான்செபிக்க, எல்லா மதில்நுழைய,
குளிர்ச்சியாய்ச் செல்லலுமே குற்றமுடை யகந்தன்
தயங்கி யதில்நுழைந்து தான்செத்து நீருய்ப்போய்
காள வனத்திலது கவரிமா னாய்ப்பிறக்க—
அரசனுக்கு நஞ்சேறி ஆயுவாய தால்மரித்து
சல்லகீ வனத்திலானை சன்னிவிலங் காய்ப்பிறந்து
அசனி கோடமென்றும் ஆனைபேர் வேடரிட்டார்.
அதுமீறித் தான்வளர்ந்து அவ்வனத்தில் தானுலவ —

சிம்மசந்திரன் அரசர்க் கரசனாதல்

அப்போது சிம்மசந்திரன் அரசுக் கரசனானன் ;
மகுடம் தரித்தார்கள் மன்னவர்கள் தான்கூடி.
பூரண சந்திரனும் புனிதயுவ ராசனானன்.

இராமதத்தை தர்மங்கள் கேட்டுத் தவம்புரிதல்

ராமதத்தா தேவியும் ராசன் மரணத்தால்
மனத்துயரம் கொண்டாளென்று மாதுயரம் தீர்க்கவென்று
தாயும்பாட் டியுமான தாபதர்ஆரி யாங்கனைகள்
சாந்தமதி இரண்ணியமதி என்னும் இருவர்வந்தார்.

---

412. மேரு. 375; 413. மேரு. 376; 414. கருடதண்டன், மேரு. 379; 415. அந்தகுடிமிவந்து; 416. காட்டுவேன்; 417. பாருங்க ளென்றுயெல்லா பாம்புகளை வரவழைத்து; 418. நுழையுமென்றார்; 419. குற்றமில்லா தான்நுழைந்தால்; 420. மேரு. 381; 421. தான் ஜெபிக்க; 422. குற்றமுடையந்தகன்; 425. நஞ்சேறி அவருமே தான்மரித்து; 426. மேரு. 384; 427. மேரு, 464; 431. புனிதயுவ ராஜனானன்; 432. ராமதெத்தா, ராஜன்; 433. மனதுயரங்; 434. தாபதரா மாரி யாங்கனைகள்; 435. சேர்ந்தும் இருவர்வந்தார், மேரு. 392;

அரசியரும் கண்டவரை அன்பாயஞ் சலிசெய்து
தர்மங்கள் கேட்டுத் தான்தபசு செய்துகொண்டாள்.

தாயிடம் விருப்புடைய சிம்மசந்திரனும் தவமேற் கொள்ளுதல்

ராஜாதி ராஜன்திரு நன்மார்க்கன் சிம்மசந்திரன்
தாயாசை தன்னால் தானும் துறக்கவென்று
தன்னரசைத் தம்பியின்மேல் தான்செய்தா னப்போது.
தாய்க்குத் தகப்பனான தாபதராம் பூரணசந்திரர்
அவரிடம் சென்றரசன் அங்காக மங்கள்கேட்டு,
அதிசெல்வந் தான்வெறுத்து அருந்தபசு செய்துகொண்டு,
சீர்மணிகள் தான்கழித்துச் சீலமாலைகள்தரித்து
சன்னைகளைந் தும்வெறுத்து சப்தபங் கியும்பெற்று
குயத்திரயத் தால்முத்திக் குணத்தானங் களிலொத்து
ஒழுக்கமோ ரைந்துடனும் ஒருபத்தி ரண்டுதவம்
பெருக்கவே தான்செய்து பேரான சாரணராய்
காயக்கிலே சம்செய்து கருணையும் நாள்தனிலே—

இராமதத்தை தன் மகனாகிய சிம்மசந்திர மாதவனிடம் பூரணசந்திரன் நிலைமை கேட்டல்

சீராமதத் தாங்கண்ணி நன்மக மாதவன்றாள்
பணிந்து சுருதிகேட்டுப் பாராளும் பூரணசந்திரன்
தனியே தவமறந்து தன்மலர்சூழ் மாதருடன்
வீற்றிருக்கும் வேளையிலே வேணதரு மம்சொன்னேன் ;
கேளாமல் தானெழுந்தான் கெடுஞ்சமுசா ரத்தனவன் ;
அலைவானோ வென்றெண்ணி அஞ்சி மனங்கலங்கி,
பவ்வியன் அபவ்வியனோ பரமனை கேட்கவென்று
வந்தே னவனுக்கு வருங்கதிகள் சொல்லவென்றாள்.

சிம்மசந்திரமாதவனின் மறுமொழி

பவ்வியனவன் வேறில்லை பரமகதி தான்பெறுவான்
முற்பவ பாசபந்தம் முளைத்ததுமக்கு ஆசையுண்டு;

---

437. தர்மங்கள் தான்கேட்டுத் தபசுகளைச்; மேரு. 397; 441. தாபதனும் பூரணசந்திரன்; மேரு. 406. 443. அதில் செல்வந் ; 444. சீர்பணிகள் தான்வெறுத்துச் சீலவிரதந்தான்தரித்து; 445. சன்னையைந்தும்; 446. குபத்திரயத், குணஸ்தானங்; 447. ஓர் பன்னிரண்டு தவம்; 449. கருணையுறும் நாள்தனிலே; 450. இராமதத் தாங்கண்ணி நன்மகன் மாதவத்தால் ; 452. தண்மலர்சூழ் ; 453. வீத்திருக்கும், 454. கெடுஞ்சமுசா ரத்தினுள்; 456. பவ்வியனோ அவவ்வியனோ, கேழ்க்கவென்று; 457. வந்தித் தவனுக்கு வருங்கெதிகள் சொல்லுமென்றாள்; 458. பரம பதந்தான் பெறுவான்;

ஆறு லவன்கதைகேட் டவனுக்கு ருரைத்தாலிப்போ
தர்மம் தலைப்படுவான் தவங்களையும் பெற்றிடுவான்
என்றுமுனி வர்சொல்ல யிராமதத் தாங்கண்ணி
முடிவணங்கித் தான்கேட்க, உத்தமரும் தான்சொல்வார் :

நாலாவது
பூரணசந்திரன் சருக்கம் முற்றும்.

ஐந்தாவது

நால்வரும் சுவர்க்கம் அடைந்த சருக்கம்

மிருகாயணனுக்கு மதுரையினிடமாக வாருணி தோன்றுதல்

கோசலையென் னும்நாட்டில் குபேரனது பட்டணம்போல்
வீறி மிகவிளங்கும் விருத்தகிரா மத்தில்பார்ப்பான்
மிருகா யணனுக்கு மெல்லியாள் மதுரையென்பாள்
இவள் வயிற்றி லுற்பவித்தாள் இனியமகள் வாருணியாம்;
மனைவி மகளுடனே மறையவன் வாழுநாளில் —

மரித்த மிருகாயணன் இரண்ணியமதியாய்ப் பிறந்து பூரணசந்திர ராசனை மணத்தல்

மரித்தமிரு காயணனும் மாயோத்தி மாநகரில்
அதிபலன் தன்மனைவி அதிசாந்த மாமதியாம்
இவர்க்குப் புதல்வியானுள் இரண்ணிய மதியென்பாள் ;
இளந்திங்கள் போலேயிவள் எழில்பரவத் தான்வளர்ந்தாள்.
நாட்டிலுள்ள பேரரசர் நங்கையைத் தான்கேட்க,
போதன புரத்தரசன் பூர்ணசந்திர ராசனுக்குக்
கன்னியைத் தான்கொடுத்தார் கனக்க மணத்துடனே.

பூர்ணசந்திரன் இரண்ணியமதி புதல்வியாய் இராமதத்தை வந்ததும் அவள் வயிற்றில் புதல்வர் இருவர் பிறந்ததும் கூறல்

இவர்வயிற்றில் மதுரைவந்து இராமதத்தை நீயானுய்;
உன்வயிற்றில் பத்திரமித்திரன் உதித்தேன்யான் சிம்மசந்திரன்;

---

460. லவன்கதையை அறிவாகக் கேட்டுச் சொன்னுல், மேரு. 452; 461. தவங்களைப்போற்றிடுவான்: 463. தான்கேழ்க்க; 464. மேரு. 454; 465. வீரிமிகவிளங்கும், பார்ப்பான். மேரு. 455; 467. இவர் வயிற்றி, மேரு. 456, 457, 469. 471. இரண்ணிய வதியென்றும், மேரு. 458; 472. எழில்பாகத் தான்வளர்ந்தாள்; 473. யேற்றரசர், தான் கேழ்க்க; 474. பௌதன புரத்தரசன், பூரணசந்திரனுக்கு, மேரு. 459; 475. கன்னிகையைத் தான்குடுத்தார் கனகமனத்துடனே; 476. இவர் வயத்தில், ஸ்ரீராமதத்தை, மேரு. 459; 477. உன்வயத்தில், உதித் தனுல் சிம்ம சந்திரன்;

ஏன்றுன்மே லாசையால் இனியமகள் வாருணியும்
உதித்திந்த பூர்ணசந்திரன் உனக்குப் புதல்வனுன்.

அரவால் மரித்த சிம்மசேனன் அசனிகோடயானையாய்ச் சிம்மசந்திரனைத் தாக்கவர அதனுக்கு நற்கதிகூறல்

அரசனர வால்மரித்து அருஞ்சல்ல கீவனத்து
அசனிகோட மென்னும் ஆனையா யுற்பவித்து
மிருகரா சனைப்போலே மிகசூரங் கொண்டுலவும்
ஆனைவந் தென்னைக்கண்டு அதிகோபந் தான்கொண்டு,
வேகாந்தமா யென்மேலே வெகுண்டுபுரண் டோடிவர,
ஆகாயத்தில் யானெழுந்தேன் அதுவந்துரத்தைப் பார்க்க;
அதற்குநற் கதியால் அதுபவமும் நானுரைத்தேன்.

சிம்மசேனனுன முற்பவம் பற்றி உரைத்தல்

சிங்கபுரத் தரசே சீயமா சேனவோய்நீ
இங்குவந் தானையானுய் என்மேல் வெகுண்டுவந்தாய் ;
முன்னரச னுயிருந்தாய்; பின்கரியாய் உன்னைக்கண்டேன்.
செல்வரசிலுன் மைந்தனுன சிம்மசந் திரனென்றேன் ;
இன்னமும் நான்சொன்ன இன்பங்கள் வேணதுண்டு.

அறம் கேட்ட ஆனை உற்ற விரதநிலையும் அது தண்ணீர் குடிக்கச் சென்று யூபகேசரியாற்றங்கரையில் காலமுந்தி நின்ற நிலையும்

ஆனை யவதியுற்று அஞ்சி மனங்கலங்கி
சாந்த மனத்தோடும் சய்யமமும் தான்பெற்று
பாவத்தால் தான்பயந்து பர்வதம்போல் தான்விழுந்து
சித்தம் மிகவதைந்து சீவகாருண் ணியம்பெற்று,
ஊனெடு தேனுங்கள்ளும் ஓரைந்து பாவங்களும்
அட்ட மதங்களையும் அய்யமறத் தான்வெறுத்து,
ஐம்புலனுந் தானடக்கி அணுவிரத மைந்துங்கொண்டு
அய்ய னறங்கேட்க அன்பாய்ச் செவிகொடுத்து,
உத்தம தத்துவத்தால் உள்ளம் மிகக்களித்து,

---

478. நேன்று ருனே நினக்குமுன் வாருணிவந்து; 479. உதித். தந்த; 481. அசனிகோடமென்று; 483. ஆனவந்ததனைக்கண்டு; 484-485. மேரு. 465; 485. அதுவந்திடத்தைப்; 486. ; அதற்குநற் கதிகளை யும்; 487. சிங்கமா புரத்தரசே சீயமா சேனைவோய்நீ; மேரு. 466; 489. மேரு. 467; 490. மைந்தனுன்; 494-496. மேரு. 468, 475; 499. மனத்தோடும் சய்யமர்கள் தாள்தொழுது; 497-498. 497-ன் பிற்பகுதி யும் 498-ன் முற்பகுதியும் 2ஆம் ஏட்டில் இல்லை. 497-ன் முற்பகுதி யும் 498-ன் பிற்பகுதியும் இணைந்து காணப் படுகிறது. இடைப்பகுதிச் சொற்கள் விடுபட்டுப் போயின; 499 அய்ய னறங்கேழ்க்க;

செய்யமா சையமத்து சகலவிருத மும்பெற்று,
மாதவந் தான்செய்து, மாசோப வாசஞ்செய்து,
திரிகுத்தி சய்யமத்தால் திரேகங் கிரசமாகிப்
பாரணையுஞ் செய்யவெகு பச்சை வகைதவிர்த்து
நற்றவலும் பிறசருகும் நன்றாய்ச்சோ தனைசெய்து
உட்கொண்டு நீர்குடிக்க யூபகேசரி யாற்றுக்
கேகி முனிக்கரையில் இழிந்துகை நீட்டித்தண்ணீர்
அள்ளித்தான் கொள்ளும்போது அருமணலில் காலழுந்தி
திரும்பிவர மாட்டால் தேங்கிதவர் நிற்கையிலே —

ஆனைமுனியைக் கோழிப்பாம்பு கடிக்க மரித்து, அவன் அமரகதியில் சீதரதேவனாதல்

அப்போ தவர்வயிரி அசத்தியகோ டன்பாவி
அரவமாய்க் கவரிமானாய் அதுமரித்துக் கோழிப்பாம்பாய்
ஆகியது கண்டுதைய்யோ! ஆனைமுனி யைப்பார்த்து,
மத்தகத்தின் மேலேறி மரணம்வரத் தான்கடிக்க,
மஞ்சுபோல் நஞ்சேற மனஞ்சலியா மாதவன்றாள்
நெஞ்சில் நினைந்துபஞ்ச மந்திரஞ் சிந்தைசெய்து
அஞ்சாமல் மெய்மறந்து அறிவால்சா சாரம்புக்கான்.
அந்தர்முகூர்த் தத்துள்ளே ஆறிரண்டாங் கற்பந்தன்னில்
அர்க்கபிரப விமானத்தில் அமரன்சீ தரனாகி —

சீதரதேவன் அனுபவித்த அமரச்செல்வம்

தூங்கி முழித்தவன்போல் துறக்கசீ யாசனத்தில்
மகுட முடியுடனே மார்பாரம் தன்னுடனே
கனககுண் டலமுடன் கனகா பரணத்துடன்
அத்தகட கத்துடன் அருமணிப்பட் டாடையுடன்
முப்பத்தி ரண்டுலக்கண முள்ள சரீரத்துடன்
ஏந்திருந்து உட்கார்ந்து இவ்விதமாய்த் தான்கண்டது
எவ்விடமோ எத்தேசமோ யாரிவரோ என்றெண்ணி
வானவரைத் தான்பார்க்க வந்துதவ திக்கியானம்.

---

501. செய்யமா, சகலவிரதமும்; 503. திருகுப்தி சைய்யமத்தால்; 504. பாச்சை வகைதவிர்த்து, பக்ஷவகை தவிர, மேரு. 477; 505. நற்றுவலும்; 512-513. மேரு. 479, 480; 514. மாதவன்றான்; 516. அறிவால்ஸா ஸாரம்புக்கான், அறிவர் நலச்சா சாரம்புக்கான்; 517. அந்த முகூர்த் தத்துள்ளே, கற்பமதில், மேரு. 482; 518. அர்க்கப்பிரப, அமரன் ஸ்ரீதரனாகி; 519. துறக்கசிம் மாசனத்தில், மேரு. 481; 520. மாபரணம் தன்னுடனே, மேரு. 483; 521. கனககுண் டலத்துடன் கனகா பரணமுடன்; 522. அஸ்தகடகத்துடன் நன்மணிப்பட்; 523. முப்பத்திரண்டுலக்ஷண; 524. எழுந்திருந்து உட்கார்ந்து, தான்கண்டிது, மேரு. 484; 526. வந்ததவதிஞானம்;

பன்னிரண்டாங் கற்பமிது பரமதவ புண்ணியத்தால்
வந்தோ மெனக்கருத வானவர்கள் தான்துதிக்க
கற்பமா தர்களப்போ கருணையுடன் தான்வணங்க
மந்தமா ருதம்வீச துந்துபி தானொலிக்க
வாசனைக ளோசனை வளமாகத் தான்மணக்க
திரேகமோ ரோசனை திரவிமதி போலொளிர
ஒன்பத் தரைமுழமாம் உத்தமரன் மெய்யளவு
அமருலக மேன்மைகள் அனேக விதங்களுண்டு.
கடற்கோ ராயிரமாண்டு கடந்து அமிர்தமுண்பார் ;
கடற்குப் பதினைந்துநாள் கழிந்துதன் மூச்செறிவார் ;
இந்த வமரனுக்கு ஈரெட்டுக் கடலாயுகம் ;
ஈரெட்டா யிரமாண்டில் இவருண்பார் நல்லமிழ்து;
இருநான்கு திங்கள்தள்ளி இவர்விடுவார் நற்சுவாசம் ;
நோய்மூப்பு வறுமைமன நோய்முதல்க ளில்லாமல்
இவ்விதமா யமரச்செல்வத் தினிதாகத் தானிருக்க—

அமைச்சன் தர்மிலனுயிருந்து பிறப்பு மாறிய குரங்கு கோழிப் பாம்பை வதைத்தல்

மந்திரி தர்மிலன் மரித்துமற் கடமாகி
வனம்திரியும் அப்போது வாற்றருகில் தான்செல்ல
ஆனையைத் தான்கடித்த அரவத்தைத் தான்பார்த்து
அன்றமைச்சு தானளித்த அரசனனை யென்றெண்ணி
கோழிப்பாம் பைப்பிடித்து குரங்குவதை செய்யலுமே—

கோழிப்பாம்பு வாலுகாபிரபை நரகனுய்ப் பட்ட துயரம்

வதைந்துவதைந் துயிர்போய் வாலுகா பிரபையென்னும்
நரகத்தில் தான்பிறந்து நண்ணியேழ் கடலாயுவும்
வதைய வதைத்தார்கள் வைரியைத் தானரகர்.
தடியும்வா ளையுங்கொண்டு தாக்கினர் வேணபடி;
நெருப்பெழக் காச்சிரும்பை நிகநிகனத் தானணைத்தார்;
செக்குரலில் இட்டவனைச் சிதறச் சுழற்றுவோரும்
நெய்யுருக்கி வரயிலிது நீரென்று பெய்வோரும்

---

527. கற்பமது பரமதவன்; 528. வந்தோமெனக் கருதி; 529. தான் வணங்கி; 532. தேகமோ ரோசனை, இரவிமதி போலொளிக்கும்; 533. ஒன்ப தரைமுழமாம் உத்தமன்றன்; 535. மேரு. 499; 536. கழித்துதன்; 537. இந்த வரனுக்கு: 538. நல்லமிர்தம்; 405. வறுமைமுந்; 541. யமரர்செல்வத்; 542. தர்மீலன் மரித்துமர்க் கடமாகி, மேரு. 512; 544. ஆனையைக் கடித்தஅந்த; 546. கோரங்கவதை, கொரங்குவதை, 548. நன்றேழு கடலாயுகம்; 550. மேரு. 515; 551. நெகநெகன 552. செக்குரலில் விட்டிவனைச் செதரச், மேரு, 516;

முள்ளெலவன் மேலவனை முன்பின் இழுப்போரும்
முன்னடந்த சூதைச்சொல்லி முகடேற்றித் தள்ளுவோரும்
கந்தைசுற்றி நெய்தோய்த்துக் கனலேற்றிக் காய்பவரும்
சீக்குழியில் இட்டவனைச் செய்திடுவார் வேணதுன்பம்.
ஒட்டகம் கரடிபாம்பு ஒருகுதிரை நாய்மரித்து
இட்டோர் குழியதுபோல் எவ்விடமும் நாற்றமுள்ள
நிரையத்தில் சுட்டவனை நிவன்மெய் யுருவமது
மேலெழும்பிக் கீழ்தலையாய் மெய்சிதறத் தான்விழுந்து
கூடுமதற் குள்ளே குத்துவார் தான்நரகர்;
கருணையில்லா தந்நரகில் கடுங்கோடன் தான்வதைவான்.

இறந்த அசனிகோட யானையின் முத்தும் கொம்பும் பூரண சந்திரனின் மார்பாரமாகவும் கட்டிலாகவும் அமைந்தமை கூறல்

வனத்தில் நரியனென்னும் வேடன்ஆனை யைக்கண்டு
கொம்புமுத்தும் தான்கழட்டிக் கொண்டுவந்தான் பட்டணத்தில்.
தனமித்திரன் என்னுமொரு தனவைசியன் தான்வாங்கி,
பொன்கொடுத்துத் தானேகிப் பூர்ணசந்திர ராசனுக்கு
பாகுடமாய்த் தான்கொடுத்தான். பார்த்திபனும் தான்மகிழ்ந்து,
கண்டுகளி கொண்டுதன் கழுத்தாரந் தன்னில்முத்தைக்
கோத்துத்தன் மார்பணிந்து கொம்புகளைத் தந்தமஞ்சம்
கட்டில்நாற் காலாகக் கடைந்தொன்றாய்க் கூட்டிதன்மேல்
வீற்றிருப்பான் பூர்ணசந்திரன் விருத்தாந்தம் போய்ச்சொன்னால்
கேட்டு அறமுணர்வான் என்றுகண தரர்சொல்ல —

பூரணசந்திரன் அறமுணர்தலும் இராமதத்தை பாஸ்கர தேவனுதலும்

பணிந்துகொள் இராமை பார்த்திபன் தன்னிடம்போய்
ஓதவவன் கேட்டு உள்ளங் குழைந்தறத்தைக்
கொண்டுதன் னுரமுத்துங் கொளுத்தினன் கட்டிலையும்
சமுசாரந் தானிருந்து சகலவிருதம் தான்தரித்தான்.
அப்போதாரி யாங்கனையும் அகங்குளிர்ந் தாசையுற்று

554-555. இவ்வடிகள் 3-ம் ஏட்டில் இல்லை; 554. முள்ளிலவன்; 555. முகடேறித் தள்ளுவோரும்; 556. கந்தைசுத்தி, கனலேத்திக்; 557. மேரு. 517; 558. ஓர் குதிரை; 559. நாத்தமுள்ள; 560. நிரயத்தில், இவன்மெய்; 562. தன்னரகர்; 564. மேரு. 523; 566. தனவயிசியன் தான்கண்டு, மேரு. 524; 567. பொன்குடுத்துத் தான் வாங்கி; 568. தான்குடுத்தான்; 570. கொண்டுதன் மார்பனிரு; 571. கட்டிலே காலாக; 573. மேரு. 526; 574. பணிந்துகேள்நீ ராமை பார்த்திபனிடஞ்சென்று; 575. குழைந்தரத்தை; 576. கொண்டுதென்னுர முத்தும்; 577. சம்சாரந், சகலவிரதம்;

எப்போ திவனெனக்கே இன்பமக னாகவென்று
தப்பில் நிதானஞ்செய்து தான்தவங்கள் செய்கையிலே —
மரித்தவள் மாதவத்தால் மாசுக்கிர கற்பந்தனில்
பாஸ்கர விமானத்தில் பாஸ்கர தேவனானாள்.

பூரணசந்திரன் மரித்து வைடூரிய தேவனாதல்

தாயாசை தன்னாலே தரணியாளும் பூர்ணசந்திரன்
நற்றருமந் தான்தேடி நன்னெறியால் தான்மரித்து,
வந்தந்த கற்பதில் வைடூரிய விமானத்தில்
வைடூரிய தேவனாகி அமரசுகம் தானடைந்து
ஆயுபதி னாறுகடல் அவருற்று வாழ்நாளில் —

சிம்மசந்திரன் பிரீதிங்கர விமானத்துத் தேவனாதல்

சிம்மசந்திர மாமுனிகள் சத்தர்ம நற்றவத்தால்
காயக்கிலே சஞ்செய்து கஷாயங்கள் தான்கடந்து,
அருகனை இருதயத்து அருங்கமலந் தானிறுத்து,
செறிவுற்ற சித்தரைத்தன் சிரமணிந்து தாள்பணிந்து
காயபரித் தியாகஞ்செய்து கற்பவக மிந்திரத்து
ஒன்பதாங் கிரைவேய்க உபரிமோ உபரிமத்து
பிரீதிங்கர விமானத்தில் பெரியஅக மிந்திரனாகி
முப்பத்தோ ராழியிவர் உத்தமா யுவும்பெற்று
முப்பத்தோ ராண்டுகழித் துத்தமா காரமுண்பார்;
முப்பத்தோர் பக்கம்சென்று மூச்செறிவா ருத்தமரும்.

நால்வருடைய செல்கதிகளை ஆதித்தியாயன் தொடர்ந்து சொல்லத் தரணேந்திரன் கேட்டல்

நால்வரும் சென்றார்கெதி நற்றவத்தால் வேணபடி;
இப்படியாம் நற்பவங்கள் இனியதர ணேந்திராவுன்

---

580. தப்பிலி தானஞ்செய்து, தப்பிநி தானஞ்செய்து; 581. மரித்துவன் மாதவத்தால், மாசுக்குற; 582, பாஸ்கர தேவனானன்; 583. தன்னாசை தன்னாலே, பூரண சந்திரன்; 585. வந்தரத்த, விமானமதில்; 587. அட்டிபதி, வாழும் நாளில்; 588. இந்த அடி 2ஆம் 3ஆம் ஏடுகளில் உள்ளது. இந்தக் கதைப்பகுதிக்கு இது இன்றியமையாதது. ஆதலின் அஃது உடன் இணைத்துக்கொள்ளப்பட்டது. 591. செறிவுற்ற சித்தனைதன்; 593. ஒன்பதாம் கிறைவேய்க, ஒன்பதாம் நிறைவேய்க; 594. பிரிதிங்கற விமானத்து, மேரு. 552; 595. மேரு. 553; 596 ராண்டுகழித் துத்தமாயும் பெற்று; 598. நால்வரும் சென்றகெதி. மேரு. 557; 599. இனியதரணேந்திரனே;

சித்த மறியவிவர் செல்கெதிகள் நானுரைப்பேன்
என்றுதித் தியாபன் சொல்ல இனியவனும் கேட்கலுற்றுன்.

ஐந்தாவது
நால்வரும் சுவர்க்கம் அடைந்த சருக்கம் முற்றும்.

ஆருவது

நால்வரும் புக்க சருக்கம்

பாஸ்கர தேவனின் அமருலக வாழ்வு முடிவுறல்

தந்தைபாஸ் கரதேவன் தன்னுயு தான்கடந்து
ஈற்றில்ஐ - மூன்றுதினம் இருக்குமவ ராயுதனில்
கண்டமா லைகள்வாட கனகமணி மாசேற
கொண்டவதி தான்மறைய குணமயங்கித் தான்வெகுள
கண்டுமெய் வெவ்வேருய்க் கணந்தோறும் தான்தோன்ற
பண்டுதான் உற்றசெல்வம் பக்ஷமதில் தான்கலைய
விண்டு மனம்சலித்து வெகுவருத்தம் தான்படுவான்.
நேன்று சமானதேவர் நேர்நேராய்த் தான்வந்து
இதுஅந்திய காலமென்று இவ்வமர னுக்குச்சொன்னுர்.
அருகாகம முனிதாள் அனுதினமும் மனதிலெண்ணி
செனத்தீ யகைத்தால் செய்யமதைத் தான்பெறுவீர்;
நாற்கெதிக்குத் துன்பமுண்டு நாற்கெதியி லின்பமுண்டு
என்றுசொன்னுர் நற்றேவர் இனிசுருதி தத்துவமும்.

பாஸ்கரன் சீதரை என்னும் பெண்ணுய்ப் பிறந்து அளகாபுரித் தரிசிகனுக்குத் தேவியாதல்

கொண்டமறன் குமைதவிர்த்துக் குளிர்ந்த பரதம்தன்னில்
வெள்ளிமலை யின்மீதில் வீரியதென் சேடியில்

---

601. இனியபவம் கேட்கலுற்றுன்; ஆருவது சருக்கத்திற்கு 2ஆம் ஏட்டில் மட்டும் 'நால்வரும் சுவர்க்கமிழிந்த சருக்கம்' என்று பெயர் காணப்படுகிறது. 602. தன்னுயுர் தான்கடந்து 603-604. மேரு. 562, 563; 603. இவ்வடி 2ஆம் ஏட்டில் இல்லை. ஆனுல் ஓர் அடி எழுதுவதற்குரிய வெற்றிடம் தரப்பட்டுள்ளது. எனவே, பிரதி செய்தபோது புரியாமல் இந்த அடியை விடுத்திருக்கலாம் எனக் கருத இடமுண்டு. 604. கனகமணி மார்சேர; 606. தான்தோன்றும்; 607. பக்ஷத்தில், பட்டகத்தில் தானகல; 608 விட்டு மனம், தான்படுவார்; 609. சாமானிய தேவர், மேரு. 567; 610. இவ்வமர ருக்குச்சொன்னுர்; 612. சௌக்கியத்தைத் தான்மறந்தால் சய்யமத்தை நீர்பெறுவீர்; 613. நற்கதியி லின்பமுண்டு; 615. கொண்டமன மேதவிர்த்துக்; 616. வீரிய தான, மேரு. 587;

தரணி திலகமென்னும் தண்ணுறு மாநகரில்
அரசனதி வேகனென்பான் அவன்மனைவி சுலக்ஷணையாம்
இவர்க்குப்பெண் ணுய்ப்பிறந்தாள் இனியசீ தரையென்றே
பேருமிட்டு தான்வளர்த்தார் பெரியசெல் வத்துடனே.
அம்மாதை வந்துகேட்டான் அளகா புரிவேந்தன்
தரிசிக னென்னும்விச்சா தரவரசன் தேவியாகி
செல்வம் செழித்திவர்கள் சென்றுவரும் நாள்தனிலே —

பூரணசந்திரனுகிய வைடூரிய தேவன் சீதரை வயிற்றில் யசோதரை என்னும் பெண்ணுய்ப் பிறந்து பாஸ்கரபுர சூரியாவர்த்தன் தேவியாதல்

பூர்ண சந்திரனும் புனிதன்வை டூரியதேவன்
முன்னுசை தன்னுலாயு முடிந்தவன் சீதரைக்குப்
பெண்ணுய்ப் பிறந்து யசோதரையென்று பேருமிட்டார்.
இளந்திங்கள் போலேயிவள் இனிதாகத் தான்வளர்ந்து
பரமனறம் விளங்கும் பாஸ்கர புரந்தன்னில்
அரசன்சூரி யாவர்த்தன் அவனுக்குத் தேவியானுள்.
இவர்களதி யின்பமுற்று இருக்குமொரு நாள்தனிலே —

சிம்மசேனனுகிய சீதரதேவன் யசோதரையின் மகன் கிரணவேகனுகப் பிறத்தல்

அரசன்மத வாரணமாய் அருந்தவத்தால் சாசாரனுய்
இருந்தசீ தரதேவன் இவராயு தான்கடந்து
இவர்வயிற்றில் உற்பவித்து இரவிமதி போல்வளர்ந்தான்;
திருகிரண வேகனென்று தீரனுக்குப் பேருமிட்டார்.
அய்ந்து வயதிலவன் அருங்கலைகள் தானுணர்ந்து,
செல்வஞ் செருக்குடனே சிறந்துவரும் நாள்தனிலே —

சூரியாவர்த்தன் துறவு

தந்தைசூரி யாவர்த்தன் தான்வெறுத்து மைந்தனுக்கு
மகுடம் தரித்தரசை மகன்கிரண வேகனுக்கு

618-620.மேரு. 592-594 ; 618. அவன்மனைவி லக்ஷ்மணையாம்; 619. இனிய ஸ்ரீ தரை ; 620. தான்வளர்த்தாள், தான்வளர்ந்து ; 621. அளகா புரத்தரசன் ; 622-623. மேரு. 596-597 ; 623. செழித்திவர்கள் ; 624. பூரணசந் திரனை ; 625. முன்னுசை தன்னுலேயும் முடிந்துவஞ் சீதரைக்கு, ஸ்ரீதரைக்கு, மேரு. 598 ; 626. பெயருமிட்டார் ; 628. பாஸ்கரபுரமதில், மேரு. 601 ; 631. அருந்தவத்தால் சச்சரனுய், சசாரனுய் ; மேரு. 604 ; 632. இருந்த ஸ்ரீதரதேவன்; 633. உற்பவித்தான் ; போல்வளர்ந்து ; 634. திருகிரகண மேரு. 606 ; 635. ஐந்து, அருங்கலையுந் ; 636. மேரு. 609; 638. மகன்கிரகண ;

குடுத்துமுனி சந்திரமுனி குணதரன் தாள்பணிந்து
சினதர்மம் தான்கேட்டுச் சினதபசு செய்துகொண்டான்.

யசோதரையும் அவள் தாய் சீதரையும் துறவு பூணுதல்

தேவி யசோதரையும் திருமாது சீதரையும்
குணவதியாரி யாங்கனைகள் குளிர்தாள் மலர்பணிந்து
இருவருந் தான்துறந்தார் இனியதாய் மகளுமப்போ.

கிரணவேகன் சித்தகூட சினாலயம் பணிதல்

அரசன் கிரணவேகன் அம்மலையில் சித்தகூடன்
ஜினபவனம் தானேகி ஜினாலயமுச் சுற்றும்வந்து
நேராக நின்றவன்முன் நிலைக்கதவம் தானீங்க,
செய்தார் ஜினதுதிகள் சித்தநமஸ் காரத்துடன்.

அவன் அரிச்சந்திர முனிவரிடம் தர்மங் கேட்டுக் காஞ்சன குகையில் கடுந்தவம் புரிய, சீதரையும் யசோதரையும் அண்மையில் தவஞ் செய்தல்

அப்போ தருகிருந்த அரிச்சந்திர மாமுனியைக்
கண்டுகளி கூர்ந்து கனகமுடி தான்பணிந்து,
பண்டு வினையகன்ற பரமனறம் தான்கேட்டு,
கொண்ட ஜினதவத்தால் குருமுனியும் சாரணராய்
கோரதவங் கள்செய்து குகைகாஞ் சனையருகே
யோகங்கள் செய்யும்தவ உத்தமனார் தர்மமுற,
ஏகியெண் சீதரையும் யசோதரையும் மாதவத்தால்
நற்றருமம் கேட்டுமாதர் நற்றவத்தால் தாங்கள்செல்ல —

மலைப்பாம்பாகிய சத்தியகோடன் கிரணவேக முனிவரையும் அவருக்கு உதவ வந்த ஆரியாங்கனைகளையும் விழுங்குதல்

முனிவர் கிரணவேகர் முக்கியதவம் செய்யுமப்போ
முன்வைரி சத்தியகோடன் மூன்றும் நரகம்விட்டு

---

639. குடுத்து முனிசந்திர முனிதரன், மேரு. 612; 641. தேவி எசோதரரையும், ஸ்ரீதரையும், மேரு. 618; 642. குணவதி யாரி யாங்கனை ; 643. இருவருந்தா ளதுணர்ந்தார் இனிதாய்; 644. கிரகணவேகன், சித்திரகூட ; 645. ஜிநபவனம், ஜினாலயமும் சுற்றி வந்து, மேரு. 620; 646. நின்றவர்முன், நிலைக்கதவு, மேரு. 627; 647 ஜினஸ்துதிகள் ஸித்தநமஸ் காரமுடன்; 648. அப்போ தவரிடத்தில் அரிச்சந்திர மாமுனிவர், மேரு. 637; 650. வினைகளற: 653. செய் யுந்தவ ருத்தமரால்; 654. ஏகியந்த ஸ்ரீதரையும் எசோதரையும்; 656. முனிகள் கிரணவேகர்;

வந்தோரிந் திரியமுதல் வகைவகையாய்த் தான்பிறந்து
காலங் கழிந்ததன்மேல் காஞ்சனகுகை யுள்பாம்பாய்
வந்து பிறந்துகோடன் வைரியாய்த் தானிருக்க,
அருகிருந்த மாமுனியை அம்மலைப் பாம்புகண்டு
கடும்வைரி தான்சினத்தால் காலைப் பிடித்துதையோ!
அருகாவென் றோசையிட்டார்; ஆரியாங் கனைகள்கேட்டு,
அதிர்ப்படத் தாங்கள்வர அரையளவு தான்முழுங்கக்
கண்டுதவ மாதர்மிகு கனகமுனி நற்புயத்தை
கொண்டிருவர் தானிழுக்கக் கூடிய மூவரையும்
செண்டாள மாயரவம் சினஞ்சென்று தான்முழுங்க —

பாம்பால் விழுங்கப்பெற்ற மூவரும் தேவர்களாதல்

மூவரதில் முடிந்து முனிவில்லா நற்றவத்தால்
அருகனை யன்புள் எழுத்தி யரும்விதியால்
ஆராதனை நான்கும் அவர்செய்து மெய்ம்மறந்து
காவிஷ்ட கல்பத்தில் கிரணவேக ருஞ்சென்று
ருசகவிமா னத்தர்க்க பிரபனென்று தேவரானார்.
சீதரையும் யசோதரையும் சீருள்ள மாதவத்தால்
அந்தக்கற் பத்திலிவர் அன்புள்ள தேவரானார்.
ஆயுபதி னாலுகடல் அவ்வமரர் செல்வமுற்று
ஆண்டுபதி னாலாயிரம் அவர்விட் டமிர்துண்பார்;
ஏழுதிங்கள் தான்கடந்து இவர்விடுவார் நற்சுவாசம்;
தவப்பெருமை தன்னாலிவர் தான்சுரராய் வீற்றிருப்பார்.

பாம்பு மரித்துப் பங்கப் பிரபையில் நரகத் துன்பம் உறுதல்

அக்கொடிய பாவிப்பாம்பு ஆர்த்தத்தியா னத்தில்செத்து
பங்கப் பிரபையென்னும் படுநரகில் தான்பிறந்து
எழும்பிவிழும் பாவிக் கீரைந்து கடலாயுகம்
அலறி யழுந்துன்பம் அனேக விதங்களுண்டு.

---

659. காலங் கழித்தான்மேல், மேரு. 741; 662. தன்சினத்தால், பிடித்ததைய்யோ; 663. மேரு. 742; 664. அதர்ப்பட; 666. மேரு. 743; 697. சண்டாள, தான்விழுங்க; 668. முனிகளிவர் நற்றவத்தால்; 669. அருகனையன் பாயுள்ளம்; 671. காபிஷ்ட கற்பதில், காவிட்ட கப்பமதில், கிரணவேக னாய்ச் சென்று, மேரு. 745; 672. ருசகவிமா னத்துக்குச் சூரியபிரபனென்று தேவனானான்; 673. ஸ்ரீதரையு மசோதரையும்; 676. அவர்விட் டமுதமுண்பார்; 678. தண்சுரராய்; 679. ஆர்த்ததிறதியா னத்தில் சென்று; 680. பங்க பிரபையென்றும், தான்விழுந்து; 682. அலறி விழுந்துதுன்பம்;

அகமிந்திர தேவனாயிருந்த சிம்மசந்திரன் சக்கிராயுதன் என்னும் அரச குமாரனாதல்

அகமிந்திர சிம்மசந்திரன் ஆயுகடல் முப்பத்தொன்றும்
அனுதினமும் செல்வமுற்று அவராயு தான்கடந்து,
நாவலந் தீவுதனில் நலமான சக்கரபுரம்
அந்நகர்க் கரசனான அபராஜிதன் தன்தேவி
சுந்தரி என்பாளுக்குச் சுதன்சக்க ராயுதனாய்,
வந்து பிறந்துமவர் இந்திர செல்வமுற்று,
ஐந்து வயதுதனில் அருங்கலையும் தானுணர்ந்து,
மணக்கோலம் செய்தார்கள் மகராசன் புத்திரனுக்கு.

சக்கிராயுதன் புதல்வனாகச் சிம்மசேனனாகிய அர்க்கப் பிரபதேவன் வந்து பிறந்து வளர்ந்துவருதல்

இவன்தேவி சித்திரமாலை இவளின்பம் தான்பொருந்தி
இனிதாய் விளங்கும்நாளில் இவர்கட்குச் சிம்மசேனன்
ஆகிய அர்க்கப்பிரப அத்தேவன் தான்வந்து
வச்சிரா யுதனென வன்பர்க்குப்புத் திரனாகி
வளமான செல்வமதில் வளர்ந்துவரும் நாள்தனிலே —

வச்சிராயுதன் சீதரையான தேவனின் மறுபிறவியாகிய ரத்தினமாலையை மணத்தல்

சீதரை யானதேவன் செல்வமற வாயுசென்று
பூமி திலகமென்னும் புரத்தரசன் அதிவேகனும்
அவன்மனைவி பிரியகாருணி அவ்வரசி தன்மகளாம்
ரத்தின மாலையென்னும் புத்திரியாய் உற்பவித்து
வச்சிரா யுதனுக்கு அரசியாய்ப் பட்டம்பெற்றாள்.
இவர்செல்வ முற்றுமிக இன்பமுறும் நாள்தனிலே —

வச்சிராயுதன் - ரத்தினமாலை புதல்வனாக யசோதரையான தேவன் இரத்தினாயுதனென்னும் புதல்வனாதல்

யசோதரரை யானதேவன் இவர்வயிற்றில் உற்பவித்து
ரத்தினா யுதனென்று உத்தமியாள் புத்திரனானான்;

---

685. தீவுதன்னில், சக்கிரர்புரம்; 686. நகரத்து அரசாண்டானபராஜிதன் தேவி; 687. என்பாளிவள் சுதசக்கிராயுத னென்றும்; 688. பிறந்து வளர்ந் தறிதிறம்; 689, வயதுதன்னில், மேரு 759; 691. மேரு. 760; 692. இவருக்குச் சிம்மசேனன்; 694. வச்சிரா யுதனென்னும், மேரு. 762; 696. சித்திரை, ஸ்ரீதரை; 697. பூமிதன்னில் காமனென்றும் புரத்தரசனதி வேகனென்றும், மேரு 764; 698. பிரப காருணி; 699. இரத்தினமாலை; 700. மேரு. 722; 702. எசோதரை மேரு. 773; 703. இரத்தினாயுதனென்று, புத்திரனாய்;

நலமாய் வளர்ந்துமிவன் நாமகளோ டாடிமெத்த
செல்வச் செருக்குடனே சீர்பெற்றுத் தானிருப்பார்.
இப்படி யாகும்கெதி இனியதர ணேந்திராவுன்
சித்தம் அறியக்கேளும் செல்லுங்கதை நானுரைப்பேன்.

ஆருவது
நால்வரும் புக்க சருக்கம் முற்றும்.

ஏழாவது
செல்லுங்கதை

அபராசிதன் தன்மகன் சக்கிராயுதனுக்கு முடிசூடித் துறவு மேற்கொள்ளல்

தலைவன் அபராசிதன் தான்துறக்க வேநினைந்து
பிகிதா சிரவரென்னும் பெருமுனிவர் தாள்பணிந்து
தர்மசாத் திரம்கேட்டுத் தன்னரசைச் தான்வெறுத்து
தன்மைந்தன் சக்கிராயுதன் தரணியர சாள்கவென்று
மகுட முடிதரித்து மாதவஞ் செய்துகொண்டார்.

சக்கிராயுதன் தன்மகன் வச்சிராயுதனுக்கு முடிசூடித் துறவடைதல்

சக்கிரா யுதராசன் சன்மார்க்க கீர்த்தியுடன்
ராஜ்யபா ரஞ்செய்து நடந்துவரும் நாள்தனிலே —
பூர்வ புண்ணியனிவன் பொருந்திய சத்தர்மத்தால்
அரசும் சமுசாரமும் அதிகவிட மென்றெண்ணி
தன்மைந்தன் வச்சிராயுதன் தன்மிசை தன்னரசை
வைத்தேகித் தந்தைமுனி வன்னப ராசிதன்ருள்

---

705. செல்வஞ் செருக்கும்பின்; 706. யாகுங்கெதி, இனியதர னேந்திரவுன்; 707. சொல்லும் கதை. ஆருவது 'நால்வரும் புக்க சருக்கம்' என்பது 707 ஆம் அடியுடியுடன் முற்றுப் பெறும் குறிப்பினை அடுத்து வரும் பிற்பகுதிகளைச் சருக்கமாக ஆசிரியர் அமைத்துத் தரவில்லை. தனித்தலைப்பு எதுவும் இன்றியுள்ளது. 707 ஆம் அடியில் 'செல்லுங் கதை நானுரைப்பேன்' எனப் பின்னர் உள்ள பகுதி குறிக் கப்படுவதனுல் இப்பகுதிக்குச் 'செல்லுங் கதை' என்று தலைப் பிட்டுள்ளேன். செல்லுங்கதையாவது இனிமேல் நிகழும் வரலாறு என்பதாம். 708. அபராஜிதன், மேரு. 775; 709. பிகிதா சுவரென்னும் பெருந்தவ மாமுனிவர்; 711. மேரு. 777; 713. சக்கிரா யுதனரசன்; 714. இராஜிய பாரஞ்; 715. பூருவ; 718. வைத்தேகித் தவமுனி வன் னபரா சிதன்ருள்;

சித்த முறப்பணிந்து சினதபசு செய்துகொண்டு
உத்தம சித்தநெறி உள்ளத்தில் தானமர்த்தி
குபத்தித்திரை யத்தால்முத்தி குணத்தானங் களிலொத்து
காதியும் தான்துறந்து கந்தகூடியை யொத்து
அனந்த சதுட்டயத்தால் அகாதியையுந் தானறுத்து
சித்திப தத்தையொத்துச் சென்றார்முத் திக்கரசாய்.

வச்சிராயுதன் தன்மகன் ரத்தினாயுதனுக்கு முடிசூடித் துறவு நெறியில் செல்லுதல்

வச்சிரா யுதனரசன் அமல னறமுணர்ந்து
மாற்றைநஞ் சென்றுவிட்டு மாதவந் தான்கருதி
மைந்தன்ரத்தி னாயுதன்மேல் மகுட முடிதரித்து
அரசை யளித்தரசன் அருந்தவம் செய்துகொண்டார்.

ரத்தினாயுதனின் பட்டத்துயானை கவளங் கொள்ளாத காரணம்

ரத்தினா யுதன்சமுசா ரத்தில் அழுந்திநிதம்
பத்தினியார் தன்பால்மனம் பற்றியர சாளுநாளில் —
வீரரசன் தன்பட்டத்து விஜயமென்ப தோர்யானை
மனதுக் கிசைந்ததொரு மனோகர உத்தியானத்தில்
வசித்திருக்கும் வச்சிரதந்த வனமுனிகள் தானோதும்
லோகானு யோகம் பரமாகமந் தான்கேட்டு
ஆனை யறிவுணர்ந்து அதன்முற் பவமறிந்து
நாற்பிறவி தான்கழிக்க நல்லறிவால் ஊன்வெறுத்து
மனவிருதம் கொண்டுநிற்கும் மர்மத்தைப் பார்த்தரசன்
மனதுயரம் உற்றுநல்ல மந்திரிவைத் தியரைக்கேட்க —
பார்த்தவர் யானைக்குப் பித்தாதி வியாதியில்லை
தருமந் தவமுணர்ந்து தான்கவளங் கொள்ளாமல்
நிற்பதுபோல் காணுதென்றார் நேரரசன் தானறிந்து
பரிசுத் தமுதளிக்க பாரணையன் றானைகொள்ள

---

719. ஜினதர்மம் செய்துகொண்டு; 720. தானமுத்தி; 721. குபத்திரைய முத்தி, குத்தித் திரையமுத்தி, குணஸ்தானமும் பெற்று; 722. தானறுத்துக் கந்தகுடியை, கெந்தகுடி யமர்த்தி; 723, சதுஷ்டயத்தால் 724. சென்றான் முத்திக்கரசாய்; 725. வமல னற முணர்ந்து; 727. மேரு. 793; 728. செய்துகொண்டான்; 729. இரத்தினா யுதராஜன் இராஜ்ஜியத்தில் தானமுந்தி, மேரு. 813; 731. வீற்றரசன், மேரு. 838; 732. மேரு. 819; 733. வச்சிரதந்தர் வாமனா லோதும்போது 734. லோகானு யோகானு; 735. ஆனை அரிதுணர்ந்து; 736. தான் கழித்து, மேரு. 838; 737. மனவிரதம், மனவருத்தம்; 738. மந்திரிவைத் தியரைக் கேழ்க்க, மேரு. 840; 739. மேரு. 841; 740. தரும தவ முணர்ந்து; 742. பாரணையின் றெண்ணிக்கொள்ள, மேரு. 842;

அரசன் களிகூர்ந்து அருந்தவன் வச்சிரதந்த
முனிகளிடம் சென்று முளரித்தாள் தான்பணிந்து
ஆனைபவம் கேட்க அருந்தவர்கள் சொல்லலுற்றார் :

வச்சிரதந்த முனிவர் ரத்தினாயுதனுக்கு ஆனையின் பிறப் புணர்த்துதல் : அரசகுமாரன் பிரீதிங்கரனும் மந்திரி குமாரன் விசித்திரமதியும் தருமருசி முனிவரிடம் தருமம் கேட்டுத் தவம் செய்தல்

நாவலந் தீவுதனில் நற்பரத சித்திரபுரம்
அரசன் பிரதீபரன் அவன்மனைவி சுந்தரியாம்
இவர்கள்சுதன் பிரீதிங்கரன் ; இவர்களுக்கு நன்மந்திரி
சித்திரமதிக்குப் பத்தினி சிறந்த விமலையென்பாள்
புத்திரன் விசித்திரமதி புகழ்ராஜ புத்திரனுடன்
கூடி வளர்ந்திருவர் குற்ற மிசைதருமம்
ஆறேழு தரமுணர்ந்து அறிவால் சுகம்வெறுத்து
தருமருசி முனிகள் தாள்தொழுது தர்மங்கேட்டு
ஜினதீக்ஷை செய்தவர்கள் செழுந்தவஞ்செய் நாள்தனிலே —

பிரீதிங்கரன் புத்திஷேணைக்கு அறிவுரை கூறல்

பிரீதிங்கரன் ஒருநாள் பெருஞ்சாகேதபுரத்துள்
சரியாமார்க் கத்திலொரு சாதியில்லாப் புத்திஷேணை
என்னுங் கணிகைமனை இவரடையத் தான்கண்டு
ஆகாரம் தானளிக்க அருங்குலந்தா னல்லாதால்
ஏகாந்த வாதிநானென் றேங்கி மனம்கலங்கி
உபசரணை செய்தாளவள் உத்தமர்க்கு வேணபடி.
வருந்திகுல மாதவர்க்கு வாக்கருள வேணுமென்று
மாமுனியைப் புத்திஷேணை மனுவமுனி சொல்லுற்றார் :
ஊனொடு தேனுங்கள்ளும் உட்கொள்ளா நல்விரதம்

---

743. அருந்தவ வச்சிரதந்தர்; 744. முனிகளுடன் சென்று; 745. ஆனைபவம் கேழ்க்க; 746. தீவுதன்னில், மேரு. 844; 747. பிரதிஹூரன், பிரதிபூபன்; 749. மேரு. 845; 750. புகழரசன் புத்திரருடன்; 751. குற்றமில்லா சத்தருமம். இந்த அடி 2ஆம் 3ஆம் ஏடுகளில் உள்ளது. தொடரின் போக்கைக் கருதினும் இது இன்றியமையாததே. எனவே, உடன் சேர்த்துக் கொள்ளப்பட்டது. 752. ஆறெழு தரங் களுணர்ந்து அறிவாலய சுகம்வெறுத்து; 753. தாள்தொழு தார் கேட்டு; மேரு. 846: 754. செழுந்தவன்செய், செழுந்தவம் செல்; 755. இந்த அடி 2ஆம்ஏட்டில் மட்டும் இல்லை. ஆனால் ஓர் அடி எழுது மளவு இடம் விடுக்கப்பட்டுள்ளது. பிரீதிங் கரரொருநாள், மேரு. 849; 756. ஜாதியிலாப், மேரு. 851; 758. அருங்குலத்தா னல்லாதாள்; 759. றஞ்சி மனம்கலங்கி; 763. மேரு. 852;

தானம் தவம்பூசை தயைசீலோ பவாசத்தால்
நற்பவங்கள் உண்டென்று நற்றவர்கள் சொல்லலுமே
புத்திஷேணையுமப்போ புகழுடனே தான்பொருந்தி
பிரீதிங் கரமுனிவர் பெருந்தவத்தோ டேகலுமே —

விசித்திரமதிமுனி வினவும் பிரீதிங்கரன் விடையும்

விசித்திர மதிமுனிவர் வீரமுனி யைக்கண்டு
இப்புரத்தி லேயுமக்கு இந்நேர மாவதென்றார்.
புத்திஷேணைக்குத்தர்மம் புகழுடனே சொன்னேனென்றார்.

விசித்திரமதி புத்திஷேணையின்மேல் ஆசைகொண்டு அவள் மனைக்குப் போதல்

கேட்டவர் ஆசைபட்டுக் கெடுதலையாய்த் தான்எண்ணி
மற்றைநாள் விசித்திரமதி மாதவ னவள்மனைக்கு
ஏகவே புத்திஷேணை எதிர்பணிந்து தானழைத்து
முன்முனிவர்க் குற்றபடி முறைமையுடன் தாள்பணிந்து
கருமம் அறவெனக்குக் கருணைசெய் வீர்களென்றாள்.
கேட்டவளைப் பார்த்துமுனி காமகதைகள் சொன்னார்.

புத்திஷேணை சொன்ன புத்திமதி

முனிவர் மனமறிந்து மூடரிவர் என்றெண்ணி
அவ்வடியா ளொப்பாமல் அறிவனிடம் தானுணர்த்த —

அரசன் கந்தமித்திரன் உதவியால் விசித்திரமதி புத்திஷேணையை அடைந்து இன்பமுறுதல்

பெருமோகம் தான்கொண்டு பெருந்தவத்தைத் தான்தவிர்த்து
பாவையைத் தான்புணரப் பலவிதமும் சிந்தைசெய்து
கடையன் புரத்துவேந்தன் கந்தமித் திரனவன்
ஊனுண்பா னவனுக்கு ஊன்சமைக்கும் பாகமுறை
தான்தெரிந்து தான்சமைத்துத் தக்கவனுக் காட்டியதில்
அவ்வரசன் தான்உகந்து அவனுலூன் தான்பொசிக்க
வேணுமென்று தான்மெத்த வெகுவினையான் தான்சமைத்துப்
போட்ட ருசியதனால் புகழரசன் தன்தயையால்
புத்திஷேணை யையொத்துப் பூரித்ததி மோகத்தைப்
பற்றிக்கொண் டின்பமுற்றான் பாவத்தா லிவ்வானையாய் —

---

768. வீரமுனியைப் பார்த்து; மேரு. 854; 769. இப்புறத்தி; 772. மற்றொருநாள், மறுநாள், மாதவள் வாழ் மனைக்கு; 775-76. மேரு. 855, 856; 776. காமக்கதைகள்; 778- மேரு. 857; 779. மேரு. 861; 780. பாவையரைத், பலவிதமும்; 782. ஊனுண்பவனுக்கு; 785. தானமைத்து வெகுவினையான் தசையை;

முனிவர் உபதேசத்தை ஆனைகேட்டு முற்பவம் உணர்தல்

வனந்திரியு மப்போதென் அருகிருந்து தானுலவ
என்னால் உரைக்குந்திரு லோகப் பத்திகேட்டு
முற்பவம் தானறிந்து மூர்ச்சித் தறிவுணர்ந்து
காயக்கி லேசம்செய்யக் கருதியதுன் னானையென்றார்.
பஞ்சேந் திரியவன்பால் பரமனறம் தான்தவிர்த்தான்.
ரத்தினராசிக் கொப்பாய் பிருத்துக்காச் சென்பதுபோல்
தாயை மறந்துதன் அடியானை யோம்புதல்போல்
இன்பத்துக் கிச்சைப்பட்டு இனியவறந் தான்விடுதல்
என்றுமுனி வச்சிரதந்தர் இன்பமுற்றுத் தானுரைக்க —

இரத்தினாயுதன் துறவுபூண்டு காயம் விடுத்து அமரனாதல்

ரத்தினா யுதன்கேட்டு நற்றர்மந் தானுணர்ந்து
பொருந்திய நன்மனதால் போகங்கள் தான்வெறுத்து
தன்னரசைத் தன்மகன்மேல் தான்தரித்தா ரப்போது.
ஐம்புலத்தைத் தானடக்கி அருந்தபசு செய்துகொண்டு
காயக்கி லேசம்செய்து கடினதவத்தி னான்கு
ஆரா தனையுடனே அருகனை உள்ளம் வைத்து
காயபரித் தியாகம்செய்து கற்பமச் சுதந்தன்னில்
அமரனாய்த் தான்பிறந்து அதிகசுக மும்பெற்றான்.

இரத்தினாயுதன் தாய் இரத்தினமாலையும் நோற்று அமரனாதல்

தாயான ரத்தினமாலை தன்மகனோடு தான்துறந்து
ஆரியாங் கனையாகி அவள்புற் கலம்வருந்த
விரதமும் நோன்புகளும் விதவிதமாய்த் தான்நோற்று
அருந்தவத்தில் மெய்ம்மறந்து அச்சுதத் தமரனானான்.

இருவரும் பெற்ற அமரச்செல்வம்

இருபத்து ரண்டுகடல் இவராயுள் தான்பொருந்தி
இருபத்தீரா யிரமாண்டு இவர்விட் டமிர்தமுண்பார்
இருபத்து ரண்டுபக்கம் இவர்கடந்து மூச்செறிவார்
இன்பமரச் செல்வமுற்று இவரிருக்கும் நாள்தனிலே —

வச்சிராயுதமுனி யோகநிலையுற்றிருக்க பங்கப்பிரபை நரகன் அதிதாருணன் என்னும் வேடனாய் வந்து அவரைத் துன்புறுத்துதல்

வச்சிரா யுதமுனிகள் வனமாம்பிரயங் குஷண்டம்

---

790. திருலோகச் சித்திகேட்டு; 793. மேரு. 868; 795-96. மேரு. 870; 798. நற்றருமந். மேரு. 872, 873; 799. பொருந்தி யவன்மனதால்; 800. தானளித்தா னப்போது, மேரு. 873; 801. செய்து கொண்டான்; 802. கடுந்தவத்தில் நான்கு; 805. அதிகசுக மும்பெற்றார்; 806 மேரு. 875; 810. இவராயு தான்பொருந்தி. மேரு. 877;

தன்னிலே தானொருநாள் தான்பிரதிமா யோகங்கொண்டு
நிச்சய தத்துவத்தால் நிர்மல சுக்கிலத்தியான
யுக்தனாய்த் தானிருக்க, உத்தமனை முன்வயிரி
பங்கப் பிரபைநரகன் பாவி கொடியன்வந்து
சக்கர புரமென்னும் சதிரான மாநகரில்
தாருண னென்னும்வேடன் தன்மனைவி மங்கியென்பாள்
இவர்வயிற்றில் தான்பிறந்தான் இருள்கிருஷ்ண நிலையுடன்
அதிதா ருணனென்றே அவனுக்குப் பேருமிட்டார்
கொடும்பாவி தான்வளர்ந்து கோருயுதங்கள் தான்கொண்டு
கொல்லுந் தொழில்களில் கொண்டவிவன் கூற்றனொப்பான் ;
வில்லுவா ளம்புகொண்டு வீரியமா வனத்தில்
செல்லுவா னொருநாளப்போ செழுங்கோப லேசியையுடன்
வச்சிரா யுதரைக்கண்டு வதைசெய்ய வேண்டுமென்று
பண்டு வைரம்வந்து பாவிவெகு கோபங்கொண்டு,
சண்டாள னைய்யோவவன் செய்தபழி வேணதுண்டு!
காதில் வசிநுழைப்பான், களிப்புடனே அம்பெடுப்பான்;
வில்நா ணிழுத்தெறிவான் வீர தபோதனர்மேல்.
பாய்ந்துபுற் கலமெங்கும் பதைக்கவே குத்திடுவான்;
அய்யன்மேல் தானேறி அடித்துச் சுழித்திழுப்பான்;
அச்சங் கரனைவசி அடிப்பானுச் சியின்மேலே
அவன்செய் வதைகளின்னம் அனேக விதங்களுண்டு.

வச்சிராயுதர் அவற்றைப் பொறுத்துச் சவ்வட்ட சித்தி பெறுதல்

அய்யனும் மெய்பொறுத்து அவ்வருத்தம் தான்சகித்து
உற்றபகை யென்றெண்ணி உத்தமனைச் சித்தம்வைத்து
தத்துவந் தானுணர்ந்து தன்மெய்யைத் தான்கடந்து
உம்ப ருலகத்துச்சி உயர்செவ்வ சித்தி புக்கான்.
முப்பத்து மூன்றுகடல் உத்தமா யுவும்பெற்று,
முப்பத்து மூவாயிரம் ஆண்டுவிட் டமுதமுண்பார்
முப்பத்து மூன்றுபட்சம் மீறியுச் சுவாசிப்பார்;

---

816. சுக்லத்தியான; 819. சக்கிர புரமென்னும், மேரு. 878; 820. மங்கையென்பாள், மேரு. 879; 821. இவர்வயித்தில், இருள் கிருஷ்ண லேசியையுடன்; 823. கோருயுதங்கள் கொண்டு; 824. தொழிலிலிவன் கொடியனெனும்; 825. வீறிய மாவனத்தில்; 826. செல்லுவா னோர்நாளப்போ ; 827. வதைசெய்ய வேணுமென்று, மேரு. 881; 828. பண்டு பெரும்வயிரி; 830. மேரு. 882; 832. பதைக்க வேகுற்றிடுவான்; 834. கரனைவசியால் அடிப்பானுச்சியின் மேல், மேரு 883. 837. உத்தபகை; மேரு. 839, 884; 840-44. மேரு. 885, 886; 841. இந்த அடி 2ஆம் ஏட்டில் இல்லை; 842. மூன்று பக்ஷம்;

சோகம் துயர்நீங்கிச் சுந்தரியார் பாசமில்லார்
சாசுவத செல்வம்பெற்று சவ்வட்ட சித்திபெற்றார்.

வேடன் ஏழாம் நரகில் விழுந்து பெருந்துயரடைதல்.

வேடனதி தாருணன் விமலனிட தன்வதையால்
பாவி ஏழாநரகில் பார்விட்டுத் தான்பிறந்தான் ;
பிறந்ததி ரேகம்விட்டுப் பெருங்குழியில் தான்விழவே,
கொடிய நரகர்சூழ்ந்து கொடும்பாவி குற்றஞ்சொல்லி
துடிக்கத் துடிக்கவனைத் துண்டாக்கித் தூறுசெய்வார்;
மேலேறிக் கீழ்மேலாய் மிரண்டழுது தான்விழுவான்.
கருணையில்லா நாரகரும் காச்சி வதைப்பார்கள்
அவனுயு தோறும்பாவிக் கருஞ்சிறைகள் வேணதுண்டு.

அச்சுத கற்பத்திலிருந்ததேவன் அயோத்தியரசன் அருக தாசன் புதல்வனாதல்

அச்சுத கற்பத்தேவர் அவராயு தான்கடந்து
தாதகி ஷண்டதீவில் தன்கிழக்கு மேருவுக்கு
மேற்கு விதேகம்தன்னில் மிகநாடு கந்திலையாம்.
அந்நாட்டில் தான்விளங்கும் அயோத்திய மாநகர்க்கு
அரசன் அருகதாசன் அவன்மனைவி தானிருவர்
சுவ்விரதை யென்றும் சுகுணசின தத்தையென்றும்
இவ்விரு வரசியுடன் இன்பமுறு நாள்தனிலே —

இரத்தினமாலை வீதபயனாயும் இரத்தினாயுதன் வீபீஷணனாயும் வாழ்தல்

ரத்தின மாலையான அச்சுதத் தமரர்வந்து
சுவ்விரதை தன்வயிற்றில் சுதன்வீத பயனென்று
பிறந்து வளர்ந்துணர்ந்து பெரும்பல தேவனானன்.
ரத்தினா யுதனான அச்சுதத் தமரன்வந்து

---

843. பாசமெல்லாம்; 844. சாசுவத செல்வமுற்றும் சவ்வட்ட சித்தியொத்தார்; 846. பாபி, மேரு. 887; 847. பிறந்திந் திரம் விட்டுப்; 848-49. மேரு. 888, 889; 850. மேலேமிகக் கீழ்மேலாய், மேலெழும்பிக் கீழ்மேலாய், புரண்டழுதும் தான்விழுவார் ; 851. காச்சி வதைவதைப்பார் ; 852. அவனுயு தோறுமாவிக் கிருஞ் சிறைகள் ; 853. அவனுயு. மேரு. 892; 854. தாதிக ஷண்ட தீவில்; 855. மேற்கது விதேகந்தன்னில், கெந்திலையாம், கந்தில யாம், மேரு. 893; 856. அய்யோத்தி மானகர்க்கு, மேரு. 895; 859. இவ்விருவர் ராஜ்யத்துடன் இன்பமுற்று; 860. இரத்தினமாலை, அச்சுதமரன் வந்து, மேரு. 897; 861. சுதன்வித்தியாபயனென்று; 862. பிறந்து வளர்ந்துணர்ந்து பேரும் பலருமிட்டு; 863. இரத்னா யுதனான;

உத்தமியாள் சினதத்தை பத்தினியாள் மைந்தனுகி
விபீஷண னென்னுமவன் இனியவசு தேவனுனன்.

இருவரும் அரசர் பலரைவென்று முடிசூடிப் பாராளுதல்

ராமகே சவரிருவர் நற்பருவ காலந்தன்னில்
போகசா தனம்பெற்று புண்ணியமும் தான்பொருந்தி
அர்த்தசக் கிரவர்த்தி அதிகசாம் ராஜ்யம்தன்னில்
பலதேவர் வாசுதேவர் பாரில்வெகு சண்டைசெய்து
செயங்கொண் டிருவரசர் செழுமகுடம் தான்தரித்து,
பட்டாபி ஷேகம்செய்து பாராளு மந்நாளில்

விபீஷணன் ஆயுள் முடிந்து இரண்டாம் நரகில் துன்புறுதல்

வீரகே சவனுன விபீஷணன் சஞ்சலத்தால்
பொருளாசை தான்கொண்டு போகத்தில் தானழுந்தித்
தன்னுயு தான்கடந்து தான்சக்கிரா பிரபையில்
பிறந்துரண் டாநரகில் பெருந்துயரந் தானடைந்தான்.

பலதேவன் துறவுபூண்டு தன்மெய்விடுத்து ஆதித்தியாபன் என்னும் தேவனுய்ப் பிறத்தல்

வீதபய ராமனுன வீரிய பலதேவன்
தம்பிதன் சோகத்தால் தான்துறக்க வேநினைந்து
அதிசெல்வம் தான்கடந்து அனுவிருத்தி மாமுனிதாள்
பணிந்து வரம்கேட்டு பரமதவம் தான்கொண்டு
ஐயொழுக்கம் நாலாராதனை ஐம்புல மெய்தவிர்த்து,
கற்பமே ழாவதான காருணிய லாந்தவத்தில்
ஆதித்தி யாபனென்னும் அமரனுய்த் தான்பிறந்தான்.

ஆதித்தியாபன் தம்பி விபீஷணனிருக்கும் நரகம் சென்று அவனுக்கு முற்பவமும் நற்கதியும் உரைத்தல்

அமரசெல் வத்திலொத்து அவதிஞா னமும்பெற்று
அன்பன் விபீஷணன் அவன்கதியைத் தானறிந்து
மனது வருத்தமுற்று மாநரகில் தானிழிந்து

---

864. உத்தமி ஜினதத்தை, மைந்தனுனன், மேரு: 898; 865, விபீஷண னென்னும் இனியவாசு; 867. மேரு. 399; 869. மேரு. 900; 870. செயங்கொண் டிவர்க்கரசன். 871. பாராளு நாள்தனிலே, மேரு. 922; 873. போகத்தாலாசை கொண்டு போகத்தில், மேரு. 927; 874. தான்கடந்து சக்கிராபிர பைநரகிரில்; 878. அனிவிருத்தி மாமுனிதாள்; 880. ஐயொக்கணுலாருய் தனையால்தான் மெய் தவிர்த்து; 881. காருணிய மாந்தலத்தில்; மேரு. 929; 882. தான் பிறந்து; 883. அவதிக்கியா னமும் பெற்று; 884. விபூஷணன், அவன்கெதியைத், மேரு. 930;

சக்கிரபிர பையின்துன்பம் சகிக்கமுடி யாதிருந்து
முற்பவமும் நற்கெதியும் உறவுரைத்தே னன்பனுக்கு.

விபீஷணன் ஸ்ரீதாமனாய்ப் பிறந்து வாழ்ந்து, அனந்த முனிவர் உபதேசத்தால் அருந்தவம் கொண்டு பிரமகற்பம் சேர்தல்

விருப்பமுடன் கேட்டந்த விபீஷண நாரகனும்
நற்பரி ணாமத்துடன் நரகாயு தான்கடந்து
நாவலந் தீவிலிவன் நன்மேரு தான்வடக்கில்.
அய்ராவத நாட்டில் அயோத்திய நகரந்தன்னில்
அரசன் ஸ்ரீவர்மனவன் அரசி சுசுமையென்பாள்
இவர்வற்றில் தான்பிறந்தான் இனியஸ்ரீ தாமனென்றே.
வளர்ந்து கலையுணர்ந்து வரசெல்வம் தானயர்ந்து
இருக்குமந்த நாள்தனிலே இவன்வெறுத்துத் தான்துறந்து,
அனந்த முனிவரென்னும் அவர்தாளினைப் பணிந்து,
சத்தர்மம் தான்கேட்டு ஜினதபசு செய்துகொண்டு
அருந்தவம் தான்செய்து அருகனிட நன்னெறியால்
காயக்கிலே சம்செய்து கற்பமாம் பிரமமதில்
தேவனாய்த் தான்பிறந்து தெளியவரும் நாள்தனிலே —

வச்சிராயுதமுனி சஞ்சயந்தராய் வந்து அருகர்பதம் அடைதல்

வச்சிரா யுதமுனிகள் வான்செல் விசித்திதனில்
பெற்றுமுப் பத்துமூன்று பெருங்கடல் ஆயுசென்று
வந்திந்த சஞ்செயந்தர் அருகர்பதம் தானடைந்தார்.

பிரமகல்பம் சார்ந்த ஸ்ரீதாமனே சயந்தனாய்ப் பிறந்து தரணேந்திரனானமை கூறல்

முன்சொன்ன பிரமகற்பத் துத்தமன் சயந்தனாகி
பெருந்தவந்தான் செய்ததனில் போகநிதா னத்தாலே
தரணேந்திர னாயினி தற்பரனே நீகேளாய்.

---

886. சக்கிரா பிரபையில் துன்பம், மேரு. 933; 887. நற்கெதியும் உரைத்தேன்நான் அன்பனுக்கு; 890. தீவிலவன் நன்மேரு தன் வடக்கில்; 891. ஐராவத நாட்டில் ஐயோத்தி மானகரில், மேரு. 971; 892. சுசீமை யென்பாள்; 893. தான் பிறந்தார்; 894. வளர்செல்வம் தான்பரந்து, மேரு. 972; 89 5, மேரு. 974; 896. முனிகளென்னும்; 897. சத்தருமம்; 899. பிரம்மமதில்; 901, வான்சவ்வ சித்திதன்னில், மேரு. 977; 902. பந்தமுப்பத்துமூன்று; 903. ஸஞ்சயந்தர் வருகர்பதம்; 904. பிரமகல்பத் துத்தமன் ஜயந்தனாகி, மேரு. 978; 905.பெருந்தவஞ் செய்ததனில்; 906. தரணேந்திர னாய்நீ தற்பரனே;

அதிதாருணநரகன் மிருசீரங்க முனியாய் வந்து தவம் புரிதல்

அதிதா ருணநரகன் அவனுயு தான்கடந்து
எழாம் நரகம்விட்டு ஏகிவந்து பாம்பாகிப்
பிறந்துபெருந் துன்பமுற்று பெரும்பாம்பு தான்மரித்து
மூன்ரும் நரகம்மேவி முன்சொன்ன துன்பப்பட்டு,
ஆயுகட லேழும் அதில்சென்று தான்மரித்து,
வந்தோரிந் திரியமுதல் வகைவகையாய்த் தான்பிறந்து
துன்பமிகப் பட்டுமிவன் துலங்கும் நாவலந்தீவில்
பரதத்தில் பூதர மணவனந் தானருகில்
அயிரா வதிதீர ஆற்றின் கரையிலொரு
தாபசன் கோசிருங்கன் தன்மனைவி சங்கிகையாம்
இவர்வயிற்றில் தான்பிறந்தான், இனியமிருசீ ரங்கனென்பான்;
வளர்ந்து அறிவுணர்ந்து அவனும் தபத்தனுகி
பஞ்சாக்கினி மத்தியத்துப் பெருந்தபசு பண்ணுகின்ருன்.

மிருசீரங்கமுனி அங்குவந்த விச்சாதரனைக் கண்டு அவன் போலாக எண்ணிய நிதானத்தால் வித்துதந்தனுய்ப் பிறந்து, பகைமையினுல் சஞ்சயந்தருக்குத் துன்பமிழைத்தல்

அப்போது வெள்ளிமலை அதில் பூமி திலகமென்னும்
மாநகரில் விச்சாதரன் மகிழவோர் விமானமேறி
அவனும் சுமாலனென்னும் ஆகாயம் தான்வருவான்
அவனைத்தா பதன்கண்டு அவனைப்போல்தான் ஆகவென்று
எண்ணி நிதானம்செய்து எளிதிலவன் தான்மரித்து
வெள்ளி மலையிலொரு வடக்குத் திசையில்மிகு
கனக வல்லவனென்னும் கீர்த்தியுள்ள மாநகரில்
வச்சிர தந்தனென்னும் விச்சா தரன்மனைவி
வித்தியுத் பிரபைக்குமிவன் வினயமாக னுய்ப்பிறந்து
வித்துதந்த னென்னும் விச்சா தரனிவனுய்

---

907. மேரு. 979; 912. வந்தோரிந்தியமுதல்; 914. பூதரமண வனத்தருகி லந்தரத்து. மேரு. 980; 915. ஐரா வதத்தில் ஆற்றின்; 916. தாபதன் தேரசிங்கன் தன்மனைவி சங்கிதயாம்; 917. இனிய மிருக சிங்கனென்றும்; 918. அவனும் தாபதனுகி, மேரு. 981; 921. மகிழ்வென் விமானமேறி, மேரு. 982; 922. அமாலனென்னும் ஆகாயம் தான்வருவார்; 923. இது முதல் ஏட்டில் 926 ஆம் அடியின் பின் காணப்படுகிறது. ஆனுல், இங்கு இருப்பதே கதைத் தொடர்புக்குப் பொருத்தமாகும். 924. இனிதிலவன் தான்மரித்து; 925. வெள்ளி மலையிலுறும் வடக்குசே டியில்மிகும்; 926. கெகன வல் லபமென்னும் மேரு. 983; 927. வச்சிர தெண்டனென்னும், மேரு. 984; 928. வித்பத் பிரபைக்குமிவன் வினைய;

பிறந்து வளர்ந்துமிவன் பூர்வ வைரத்தால்
சஞ்சயந்த ரைக்கண்டு சினம்சென் றெடுத்துக்கொண்டு
வந்திந்த வைந்தடத்தில் வதைத்து மனம்சலியான்
விச்சா தரரைக்கொண்டு வேணபழி செய்ததுண்டு.

சமுசாரச் சுழற்சி இத்தகையதாதலால் கோபத்தை விடுக எனத் தரணேந்திரனுக்கு உரைத்தல்

சம்சார சீவன்களில் சத்துருக்கள் வேணதுண்டு
இப்படி யாகுமிந்த இனியசமு சாரமையா !
கோபத்தை நீதவிர்த்துக் கொடுமையை நீவிடுவாய்
என்று சொன்னு ராதித்தியாபன் இனியதர ணேந்திரனுக்கு.

தரணேந்திரன் ஆதித்தியாபனைத் துதித்து, விஞ்சையர்க்கு வித்தையின் ஆற்றலைக் குறைத்து, சஞ்சயந்தரை வழிபடல்

கேட்டு தரணேந்திரன் கிலேசமுந் தான்மறந்து
ஆதித்தியா பனைநோக்கி அன்பாய்த் தரணன் கேட்பான்;
உம்மாலே நற்றர்மம் உறுதியாய் நானடைந்தேன்
இந்தவிச் சாதரர்க்கு இனியவித்தை வேணதுண்டு
அதனல் முனிவர்களுக்குக் கதிவருத்தம் தான்செய்வார்
கெடுப்பேன்வித் தையையென்ருன் கேடுசெய்ய வேண்டா
ஒப்பாமல் தரணேந்திரன் ஓர்வித்து தந்தனிட [மென்ருர்.
குலத்தில் உதித்தமைந்தர்க் கோர்வித்தை யும்முதலாய்
மங்கையர்க்கு மாத்திரம் மாமுனிவர் சன்னதியில்
வந்து உபவசித்தால் வஞ்சியர்க்கு வேணவித்தை
உண்டுபண்ணி வைத்து உத்தம சஞ்சயந்தர்
பிரதிபிம்ப மொன்றமைத்தார் பெரும்வெள்ளி மலையதனில்
இந்தமலைக்கு ஸ்ரீமா னென்று பேர்கொடுத்து
தேவனைத் தான்வணங்கித் தெளிவாய் வித்துதந்தனைப்
பேசி மனங்கலந்து பிரியமுடன் தான்விடுத்தார்.

வித்துதந்தன் முதலியோர் அவரவர்களிடம் சேர்தல்

பாபநா சனஞ்செய்ய பரமனறந் தான்கேட்டு
வைரங்கள் நீங்கி அவர்களிடம் தானடைந்தார்.

---

930. பூருவ வயிரமதால், மேரு. 986, 987; 933. வேணபடி செய்த துண்டு; 934. ஸம்ஸார ஜீவன்களில்; 935 இனியஸமு ஸாரமைய்யா; 940. உம்மாலெனக்குத்தர்ம; 941. மேரு. 990; 942. ஆனு முனிவர் களுக்; 943. வேண்டாவென்ருர், மேரு. 991; 946. மங்கையர்கள் மாத்திரம், மேரு. 998; 949. மலையின் மேல், மேரு. 995; 950. ஸ்ரீமான் இன்றுமுதல் பேருமட்டார்; 952, மேரு. 1103; 954. வைரங்கள் தானீங்கி அவரவர்க ளிடஞ்சேர்ந்தார், மேரு. 1009;

இப்படி யென்றுவீரர் ஸ்ரீகௌதமர் சொல்லலுமே —
சிரேணிக மகராசன் செல்கதைகள் தான்கேட்பான்.

மேருமந்தரர் தோற்றம்

ஆதித்தி யாபதேவன் அமராயு தான்கடந்து
நாவலந் தீவில்தெற்கு நல்ல பரதமிதில்
உத்தர மதுரையென்னும் சித்திர மாநகரில்
அனந்தவீ ரியனென்னும் அரசன் மனையிருவர்
மேருமா லினியுடன் மிகுகற்பி அமிர்தமதி
இவர்க ளுடனரசன் இன்பமுறும் நாள்தனிலே —
மேருமா லினிக்காதித் தாப னமரன்வந்து
உற்பவித்து மேருவென்றும் உலகோர் புகழ்முதிர்ந்தான்
அமிர்தமதி வயிற்றில் அன்பன்தர ணேந்திரன்வந்து,
மந்தர னென்றுதித்த சுந்தர மைந்தனுஞன்.
மேருவும் மந்தரரும் மிகுதிங்கள் போல்வளர்ந்து
சகல கலையுணர்ந்து சம்பூர்ண ராகியபின்
செல்வத்தில் தானுயர்ந்து செழுமாத ரைப்புணர்ந்து
போகசா கரந்தன்னில் பொருந்தி யவரழுந்தி
இருவோர் ஒருமனதாய் இருக்குமந்த நாள்தனிலே —

மேருமந்தரர் துறவு பூண்டு விமலதீர்த்தங்கரரைப் பணிந்து அறங்கேட்டு அவருடைய கணதரராய் அமர்தல்

நல்லரசு செல்மாதரும் நஞ்சென்று தான்வெறுத்து
உத்தம சித்தநெறி உள்ளத்தில் தானமர்த்தி
தத்துவமும் சாத்திரமும் தாங்கள் மனதிலெண்ணி
வெற்றிபெற் றிருந்த விமலன்சன் னதிக்கேகி,
தேவர்செய் ஸ்ரீவிகாரம் திருக்கோலத் துடனேகி

---

955. யென்றுவீர ஸ்ரீகௌதமர் சொல்ல; 956. சிலகதைகள், தான்கேழ்ப்பான்; 958. நல்லபர தந்தன்னில்; 958-961. மேரு. 1012, 1016, 961. மிகுகற்பி யமுர்தமதி; 963-64. மேரு. 1017, 1018; 963. லினிக்காதித் தாதா பரன்வந்து; 964. உலகோ புகழ்துதிக்க, மேரு. 1017. 1018; 965-966. ‘அமிர்த மதிவயிற்றில் மந்தரன்சுந் தரனுஞன்’ என்றும் தொடர்ந்து மேருமந்தரரும் மிகுதிங்கள் போல் வளர்ந்து’ என்றும் முதல் ஏட்டில் காணப்படுகிறது. இப்பொழுது தரப்பட்டிருப்பது இரண்டாம் ஏட்டில் கண்ட பாடம். 966ஆம் அடி 2ஆம் ஏட்டில் மட்டும் காணப்படுவதாகும். தரணேந்திரனே மந்தர ஞகப் பிறந்து பேறு பெற்றுன் என்பது சரிதமாகலின் இவ்வடி இங்கு ஏற்புடையதேயாகும். 967-970. 1019-1024; 967. மேருமந் திரரும்; 970. பொருந்தி யவரும்முற்றி; 971. இருவர் ஒருமனதாய்; 972. நல்லரசுஞ் செல்வமும் நஞ்சென் றெென வெறுத்து; 974. தத் தவா சரித்திரமும்; 975. மேரு. 1025; 976. தேவர்ஜெய;

மானஸ்தம் பத்தையெய்தி வலம்கொண்டு தான்பணிந்து
பொன்னெயிற் கிறைவனையன் புனிதாளிணை பணிந்து
துய்யமலர் கள்தூவித் துதிகள் பலவும்செய்தார்.
அய்யன்முன் னின்றுமவர் அறிவாய்த்தத் துவம்கேட்டார்.
தர்மமனு பிரேக்ஷையும் துவாதசாங் கமும்கொண்டார்
அய்யமறக் கேட்டு அய்யொழுக்க மும்பெற்றார்.
சத்தர்ம ராகியவர் சகலபுண் ணியமும்பெற்று
சுத்த சினதபசு சுதவிதியால் செய்துகொண்டு
பன்னிரண்டு நற்றவங்கள் பாங்குடனே சித்திசெய்து.
யோகிக ளாகியோகத்து உக்தசெய மும்பெற்று
நித்தன் விமலதீர்த்தத் தொத்த கணதரராய்
முற்று முணர்ந்தவர்கள் சுத்தகே வலியாகி
முத்தியைத் தானடைவார் உத்தமரோ டொத்தவரும்.

மேருமந்தர மாலையாம், பவரோக மந்திரம் பெற்றார் பெரும்பேறு பெறுவர்

மேருமந் தரமாலை மிக்கோர் புகழ்சரிதம்
பவரோக மந்திரமிதைப் படிப்போருரைப் போர்கேட்போர்
இவ்வுலகில் செல்வமுற்று இனியசுகம் தானடைந்து
முற்பிறவி தான்கடந்து முத்திக் கிளவராய்
எப்போதும் சீர்பெற்று இனியநெறி தான்பெறுவார்.

ஏழாவது செல்லுங்கதை முற்றும்

மேருமந்தர மாலை முற்றிற்று

---

977. மேரு 1048: 978. பொன்னைக் கிறைவனய்யன்; 979. துதிகள் பலவும்செய்து, மேரு. 1190; 980. அய்யன்முன் னவர் நின்று அறிவாய்த்தத் துவங்கொண்டார்; 981. துவாதாங் கமுங் கேட்டார்; 982. ஐயொழுக்க மும்பெற்றார்; 983. சத்தரும; 985. பாங்குடனே செய்துகொண்டு; 986. உத்தசம்யம் பெற்று; 994. 'எப்போதும் சீர்பெற்று இனியநெறி தாம்பெறுவார்' என்பதோடு முதலேடு முடிகிறது. இதுவே நூலின் இறுதியடி. 2ஆம் ஏட்டில் இதனைத் தொடர்ந்து பின்வரும் இரண்டடிகள் காணப்படுகின்றன:

'மேருமந்தர மாலையை மேலான செந்தமிழில்
செய்தவர் பாதத்தைச் சீராய்ப் பணிந்திடுவோம்.'

இம் மாலை பாடிய ஆசிரியர் பாரீசுவநாதருக்குரிய போற்றுதலாக இவ்வடிகள் உள்ளமையினால் இவற்றைப் பின்வந்த ஏடெழுதியோர் சேர்க்கையாகக் கொள்ளலாம்.

பவாவளி சரிதம்*

முதலாவது : சிம்மசேனமகாராஜன் பிறவி

முதலாவது சிம்மசேன மகாராஜனாய்,
2 வது அசனிகோட மென்னும் யானையாய்,
3 வது ஸகஸ்ராரகல்பத்து ஸ்ரீதரதேவனாய்,
4 வது கிரணவேக னென்னும் வித்தியாதரனாய்,
5 வது காபிஷ்ட கல்பத்து கனகபிரப தேவனாய்,
6 வது வச்சிராயுத னென்னும் அரசனாய்,
7 வது சர்வார்த்தஸித்தி தேவனாய்,
8 வது சஞ்சயந்த ஜினேஸ்வரனாய்
முத்திபதம் அடைந்த இதுவே.

இரண்டாவது : இராமதத்தையார் பிறவி

முதலாவது மதுரை யென்னும் பிராமணியாய்,
2 வது ராமதத்தா தேவி என்னும் அரசியாய்,
3 வது மகாசுக்ல கல்பத்து பாஸ்கரதேவனாய்,
4 வது ஸ்ரீதரை என்னும் அரசியாய்,
5 வது காபிஷ்ட கல்பத்துத் தேவனாய்,
6 வது ரத்னமாலை யென்னும் அரசியாய்,
7 வது அச்சுத கல்பத்து அமரனாய்,
8 வது வீதபயனென்னும் பலதேவனாய்,
9 வது லாந்தவ கல்பத்தில் ஆதித்தியாப தேவனாய்,
10 வது மேரு கணதரராகிவந்த இதுவே.

மூன்றாவது : பூரணசந்திரன் பிறவி

முதலாவது வாருணியென்னும் பிராமணி புத்திரியாய்,
2 வது பூரண சந்திர னென்னும் புதல்வனாய்,
3 வது மஹாசுக்ல கல்பத்தில் வைடூர்ய தேவனாய்,
4 வது யசோதரை யென்னும் அரசியாய்,
5 வது காபிஷ்ட கல்பத்தில் தேவனாய்,

---

* ஏட்டில் கண்டுள்ளபடி கதைமாந்தர் சிலருடைய பிறப்பு வரிசையைத் தெரிவிக்கும் இந்த 'பவாவளி' இங்குத் தரப்பட்டுள்ளது. இதற்கு 2 ஆம் ஏட்டில் 'முற்பவ சரிதம்' என்று பெயர் தரப்பட்டுள்ளது.

6 வது ரத்நாயுதன் என்னும் அரசனாய்,
7 வது அச்சுத கல்பத்தில் அமரனாய்,
8 வது விபீஷணனென்னும் கேசவனாய்,
9 வது சக்கிரபிரபையில் தேவனாய்,
10 வது ஸ்ரீதாமா என்னும் அரசனாய்,
11 வது பிரமகல்பத்தில் அமரனாய்,
12 வது ஜயந்த னென்னும் புதல்வனாகி,
13 வது பவண லோகத்தில் தரணேந்திரனாகி,
14 வது மந்தர கணதரராகி வந்த விதுவே.

நாலாவது: சத்தியகோடன் பிறவி

முதலாவது ஸ்ரீபூதியென்னும் பிராமணனாய்,
சத்தியகோட னென்னும் மந்திரியாகி,
2 வது அகந்தன சர்ப்பமாகி,
3 வது சமரி யென்னும் மிருகமாய்,
4 வது குக்குட சர்ப்பமாகி,
5 வது வாலுகாபிரபையில் நரகனாய்,
6 வது மஹாசர்ப்பமாகிப் பிறந்து,
7 வது பங்கப் பிரபையில் நரகனாய்,
8 வது ஆஸஸ்த வறங்களி லனுபவ ஜீவனாய்,
9 வது அதிதாரணனென்னும் வேடனாய்,
10 வது தமபிரபையில் நரகனாய்,
11 வது மலைப்பாம்பாகி,
12 வது வாலுகா பிரபையில் நரகனாய்,
13 வது விருகஷ்டனாய் வந்தவிதுவே.

அய்ந்தாவது: பத்திரமித்திரன் பிறவி

முதலாவது பத்திரமித்திரனென்னும் வணிகனாய்,
2 வது சிம்மசந்திர னென்னும் அரசனாய்,
3 வது உபரிமாஉபரிமத்து அகமிந்திரனாய்,
4 வது சக்கிராயுதனென்னும் அரசனாய்,
முத்தியடைந்தவர் வந்தவிதுவே.

பவாவளி முற்றிற்று.

மாலைமொழியகவல்*

விமலபட் டாரகர் விளங்கிய காலத்
திமயவர் நியமித் தேழ்நிலப் பொன்னெயி
லமர்ந்த தீராறு நன்முனி கணத்துள்
மிகுதவ ராகிய மேருமந் தரரெனும்
கெணதரர் சரிதம் கேட்கவென் பார்க்குப்
